அருளோசை

திருவள்ளுவர் ஆண்டு 2004
புரட்டாசி
1973 செப்டம்பர்

சமய பாட போதனைத் திங்களிதழ்



அருள்தரு தேவி கருமாரி அம்மன்

பூரணி!
புராதனி!
சுமங்கலே!
சுதந்தரி!
புராந்தகி!
திரியம்பகி!
எழில் புங்கவி!
சிவ சங்கரி!
நாயகி!
நான்முகி!
நாராயணி!
சாம்பவி!
சாமளை!
மாலினி!
வாராகி!
மாதங்கி!

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
சென்னை-600018

சிவனடியார் வரலாறு

நரசிங்க முனையரைய நாயனார்

"தேடாத பெருவளத்தில் சிறந்த திருமுனைப்பாடி" நாட்டை, திருநீறே பெருஞ் செல்வம் எனவும், பரமசிவனுடைய அடியவர்களின் திருவடிகளைப் போற்றுதலே பெரும் பேறு எனவும் கருதும் நரசிங்க முனையரையர் என்னும் குறுநில மன்னர், குலமரபின் வழுவாது அரசாண்டு வந்தார்.

சைவப் பெருங் கோயில்களில் நாடோறும் வழிபாடுகள் சிறப்புற நிகழ்த்தி, கனவிலும் மறவாது சிவத்தொண்டாற்றி வந்தார் நரசிங்க முனையரையர். ஒவ்வொரு திருவாதிரை நாளிலும் சிறப்பு வழிபாடுகள் செய்வித்துத் தம் பால்வரும் திருநீறணிந்த தொண்டர்களுக்கெல்லாம் இன்னமுதும், நூறு பொன்னும் அளித்து வந்தார்.

நரசிங்க முனையரையர் இவ்வாறு செய்துவரும் போதில் ஒரு திருவாதிரை நாளில், மேன்மை நெறித் தொண்டர்களுக்கு நடுவே "மான நிலை அழிதன்மை வருங்காமக் குறிமலர்ந்த ஊன நிகழ் மேனியுடைய" ஒருவர் திருநீறணிந்து வந்தார். அவர் தோற்றத்தைக் கண்டு சுற்றிலுமிருந்த அடியவர்கள் இகழ்ந்து ஒதுங்கினர். இது கண்ட நரசிங்க முனையரையர் அவ்வடியவரின் எதிரே சென்று, கைகூப்பி வணங்கி, அவரை அழைத்து வந்து மிகவும் போற்றிப் பேணி, "சீலம் இலரே எனினும் திருநீறு சேர்ந்தாரை ஞாலம் இகழ்ந்தருநரகம் நண்ணாமல் எண்ணுவார்". மற்றைய அடியவர்கட்கு அளித்தது போல் இரட்டிப்புப் பொன் கொடுத்து இனிய சொல் பேசி விடைகொடுத்தனுப்பினார்.

இவ்வாறு சிவத்தொண்டின் அருமை மிக்க நெறியை எந்நாளும் செம்மையுடன் ஆற்றி "பைவளர்வாள் அரவணிந்தார் பாதமலர் நிழல் சேர்ந்து, மெய்வகைய வழி அன்பின் மீளாத நிலைபெற்றார்."

—மருதமலையான்.

பிரமாதீச ஆண்டு புரட்டாசித் திங்கள் 23-ஆம் நாள் (9-10-73) செவ்வாய்க்கிழமையன்று, நரசிங்க முனையரைய நாயனாரின் திருநட்சத்திரமாகிய சதயம் வருகிறது.

அருளோசை

திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள் நாடு.

மணி 2	பிரமாதீச புரட்டாசி 1973 செப்டம்பர்	ஓசை 3

அருளோசை அன்பர்களுக்கு வணக்கம்

"அருளோசை" இரண்டாவது ஆண்டில் வெற்றிகரமாக நடை பயின்று கொண்டிருக்கிறது. அருளோசையின் வளர்ச்சியில் அன்பர்கள் கொண்டிருக்கும் ஆர்வம் எங்களுக்கு நல்ல ஊக்கம் தருகிறது.

சந்தா பற்றிப் பல அன்பர்கள், கருத்துக் கேட்டு எழுதியுள்ளனர். சந்தா தொகை ரூ. 5/- ஆக்கப்பட்டதும் ஏற்கெனவே ரூ. 3/- செலுத்தியவர்கள், தங்கள் மீதத் தொகையைச் செலுத்த வேண்டும் என அறிவித்தோம். பின்னர் இழப்பு ஏற்பட்டாலும் ஏற்கெனவே ரூ. 3/- செலுத்தியவர்களுக்குத் தொடர்ந்து ஓராண்டுக்கு இதழ் அனுப்ப முடிவு செய்யப்பெற்றது. எனவே முன் இதழில் அறிவித்திருந்தபடி 15-8-73 வரை ரூ. 5/- செலுத்தியவர்களின் மீதமுள்ள ரூ. 2/- இந்தவகையில் சரிக்கட்டிக் கொள்ளப் பெறும். 15-8-73க்கு மேல் சந்தா செலுத்தியவர்கள் ரூ. 5/- வீதம் கணக்கிடப்பெறும். பல அன்பர்கள் தங்கள் சந்தாவைப் புதுப்பிக்க வில்லை. எனவே அருளோசையின் வளர்ச்சியில் அக்கரை கொண்ட அன்பர்கள் தங்களால் இயன்ற அளவு சந்தாதாரர்களைச் சேர்த்துதவ வேண்டுகிறோம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

இந்த ஆண்டு பேரவைக் கிளைச்சங்க மாநில மாநாடும், பேரவை மாநிலக்குழுக் கூட்டமும் 7-10-1973 ஞாயிற்றுக் கிழமை திருச்சிராப்பள்ளியில் நடைபெற இருக்கின்றன. தமிழகத் திருமடங்களின் தலைவர்கள், அமைச்சர்கள், அறநிலைய ஆணையர் முதலியோர் கலந்து கொள்கிறார்கள். அன்று காலையில் கிளைச்சங்கப் பிரதிநிதிகள் மாநாடும், பிற்பகலில் பேரவை மாநிலக் குழுக்கூட்டமும், மாலையில் பொதுக் கூட்டமும் நிகழும்.

எல்லாக் கிளைச் சங்கங்களும் பேரவையின் பணிகளில் தீவிரப் பங்கு கொள்ளவேண்டுமென்று பேரவை பெரிதும் விரும்புகின்றது. ஒவ்வொரு கிளைச்சங்கமும் தலைவர், செயலாளர் அல்லது ஒரு உறுப்பினர் ஆக இருவரைத் தேர்ந்தெடுத்து மாநில மாநாட்டிற்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. பிரதிநிதிகள் தங்கள் செலவிலேயே வந்து போகவேண்டும். உணவு உறைவிடம் இவற்றைப் பேரவை ஏற்பாடு செய்யும்.

அருளோசை சந்தா விகிதம்

ஓராண்டு சந்தா ... ரூ. 5 (ஓராண்டிற்கு குறைந்த சந்தா கிடையாது.)

விளம்பர விகிதம்.

	ஓரிதழுக்கு ரூ.			ஓராண்டிற்கு ரூ.
உள்ளே முழுப்பக்கம்	25 00	...	...	250 00
பின் அட்டை உட்புறம்	50 00	...	...	500 00
பின் அட்டை வெளிப்புறம்	100 00	...	...	1000 00
முன் அட்டை உட்புறம்	75 00	...	...	750 00

மேற்கண்ட விகிதத்தில் அரை, கால் பக்க விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்பெறும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
சென்னை-600018.



கல்விக்குரிய நூல்கள்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

வாழ்க்கைக்கு உண்ணுதல் அளவுக்குக் கற்றல் இன்றியமையாத கடமை. இல்லை, உண்ணலினும் சிறந்தது கற்றல். உண்ணல் உடலை வளர்க்கிறது; உயிர் வாழ்க்கைக்குத் துணை செய்கிறது. கற்றல் உயிர்க்கு ஊட்டம் தருகிறது; உடல் நலம் பேணுவதற்கும் துணை செய்கிறது. உணவை ஒரோவழி மருந்தென்பாரும் உண்டு. ஆனால், கல்வி, உயிரின் அறியாமை நீக்கும் அருமருந்து. சிறந்த நூல்கள் தொகுக்கப் பெற்ற நூலகத்திற்கு 'உயிர் மருந்தகம்' என்று ஆன்றோர் வழக்கு உண்டு. ஆதலால், உயிர்க்குறை நீங்கி நிறைநலம் பெற்று வாழ விரும்புவோர் நல்ல நூல்களைத் தேடிக் கற்கவேண்டும்.

நல்ல நூல்கள்...............! என்ன இலக்கணம்..............? நத்தையிலிருந்து முத்துப் பிறக்கலாம். சேற்றில் செந்தாமரை தோன்றலாம். ஆனால், நல்ல நூல்கள் நல்ல மனிதர்களிடத்தில்தான் தோன்றும். சிந்தனையில், சீலத்தில் சிறந்தவர்களாலேதான் நல்ல நூல்களைத் தோற்றுவிக்க முடியும். நல்ல நூலாசிரியன் புலமையுடையவன் மட்டுமல்ல; எழுதத் தெரிந்தவன் மட்டுமல்ல. புலன்களில் அழுக்கற்றவனாக இருக்க வேண்டும். இன்று, பொறிகளிலேயே அழுக்கைச் சுமந்து திரிபவர் பலர், இலக்கிய கர்த்தாக்கள் ஆகிவிட்டனர். இந்தக் கொடுமை அவ்வளவு பெரிதல்ல. பொறிகளில் அழுக்கு வெளிப்படையானது. ஆனால், பொறிகளில் தூய்மை காட்டிப் புலன்களின் அழுக்கைச் சுமந்து நடமாடுவோர் நல்ல இலக்கியப் படைப்பாளர்கள் என்று நடமாடுவது இழுக்கேயாம். ஆதலால், படித்தற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்குமுன் அந்த நூலின் படைப்பாளனைப் பற்றியும் அறிந்து கொள்வது நல்லது. இது பொதுவிதி. ஆனால், நாற்றமுள்ள நத்தையிலிருந்து முத்து பிறக்கவில்லையா? தமது நிலையை இயல்பில் உணர்ந்து கழிவிரக்கம் கொண்டு வளர்ந்து உய்ய வேண்டும் என்ற பேரார்வத்தில் இலக்கியம் செய்யும் சிந்தனையாளர்களும் உண்டு. அவர்களுடைய வாழ்க்கை நமக்குப்

படிப்பினையல்ல. அவர்கள் படைத்த இலக்கியங்களே நமக்குப் படிப்பினை. உதாரணமாகத் தமிழகத்தில் அருணகிரிநாதரை எடுத்துக் கொள்ளலாம். திருப்புகழ் பாடத் தொடங்கிய அருணகிரிநாதரின் முன்னைய வாழ்க்கை, இரங்கத்தக்க வாழ்க்கையே! ஆனாலும், தமது இரங்கத்தக்க நிலையை அவர் உணர்ந்ததைப் போல வேறு யாரும் உணரவில்லை. இத்தகையோர் படைப்பு, சிறப்பு விதி.

நூல்களைப் படித்தலைவிட, படித்தற்குரிய நூல்களைத் தேர்ந் தெடுப்பதிலே வாழ்க்கைக்குரிய வெற்றியில் பாதி முடிந்து விடுகிறது என்பார் ரஸ்கின். நூல்களைப் படித்தலும் ஒரே வகையா? நிறைய நூல்களைப் படிக்கும் வழக்கமுடைய ஃபிரான்சிஸ் பேக்கன் "பல நூல்கள் படிக்க!" என்றார்; "சில நூல்கள் படித்து மகிழ!" என்றார்; "மிகச் சில நூல்களே படித்துச் சீரணித்துக் கொண்டு வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகத்தக்கன" என்றார்.

திருவள்ளுவர் படித்தற்குரிய நூல்களைப் பொதுவாக வலியுறுத்த வில்லை. அவர் நூலைப் படிக்கும் மனிதனுடைய தகுதிக்கேற்றவாறு- மனநிலைகளுக்கேற்றவாறு நூல்களைத் தேர்ந்தெடுக்கும்படி வழிகாட்டு கிறார். அது என்ன வழி? என்பதை அடுத்து ஆராய்வோம்.



திரிசூலநாதர் கோயில்

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

முன்னுரை :

தருமம் மிகு சென்னை மாநகரைச் சார்ந்தும் சூழ்ந்தும் விளங்கும் திருக்கோயில்கள் எத்தனையோ பல உள்ளன. திருவொற்றியூர் திருமயிலாப்பூர் திருவல்லிக்கேணி திருவான்மியூர் முதலிய பழமையும் பெருமையும் பெற்ற கோயில்களைப் பற்றி எல்லோரும் அறிவர். ஆனால் பொதுமக்களால் பெரிதும் அறியப்படாமல், பழமையும் பெருமையும் மிக்க கோயில்கள் ஒரு சிலவும், சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ளன. அவற்றுள் திரிசூலநாதர் திருக்கோயிலும் ஒன்றாகும்.

கோயில் அமைப்பு :

மீனம்பாக்கத்துக்கும் பல்லாவரத்துக்கும் நடுவே, பெருஞ்சாலையில் இருந்து பிரிந்து செல்லும் ஒரு பாதை. திரிசூலத்தில் உள்ள திருக்கோயிலின் வாயிலுக்கே நம்மை அழைத்துச் செல்கிறது. குன்றுகளின் மீதாகச் செல்லும் இந்தப்பாதை, ஊந்தூர்திகளில் செல்லுவதற்கும் ஓரளவு தகுதி வாய்ந்ததாக இருக்கின்றது.

நான்கு சிறிய மலைகளின் மத்தியில், அழகிய நல்ல சூழ்நிலையில் திரிசூலநாதர் திருக்கோயில் அமைந்து திகழ்கின்றது. நான்கு மறைகளின் உட்பொருளாக மறைந்து] நிற்கும் இறைவன், அதனை நமக்கு உணர்த்தவே இங்கு இவ்வாறு எழுந்தருளி இருக்கின்றார் போலும் என்ற எண்ணம், இக்கோயிலைக் காணும்போது எழுகின்றது. நல்ல இயற்கைக் காட்சியழகும், இனிய அமைதியும்மிக்க சிறந்த சூழலில், இக்கோயில் அமைந்து விளங்குகின்றது. பரந்த வானத்தையும், சுற்றிச் சூழ்ந்துள்ள சிறு குன்றுத் தொடர்களையும் காணும்போது, நம் மனத்தில் சாந்தியும் இன்பமும் தேங்கி நிற்கின்றன. ஒரு புனிதமான நல்லுணர்ச்சி நம் உள்ளத்தை ஆட்கொள்கின்றது.

பல்லவபுரம் :

கோயிலின் அமைப்பே, அது மிகவும் பழமை வாய்ந்தது என்பதனைப் புலப்படுத்துகின்றது. 'பல்லாவரம்' என்பது 'பல்லவபுரம்' என்பதன் திரிபேயாதலால், ஒரு காலத்தில் இப்பகுதிகள் எல்லாம் பல்லவர்களின் ஆட்சியில் சிறப்புமிக்குத் திகழ்ந்தமையினை யுணரலாம். பல்லாவரம் மலையின் மீது மகேந்திரவர்மன் (கி.பி. 600–630) அமைத்த சில சிற்பங்கள் இருத்தலும், இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

பெயர்க் காரணம் :

திரிசூலம் கிராமம், ஒரு காலத்தில் மிகவும் புகழ்பெற்றிருந்திருக்க வேண்டும். சுரம் என்பது பாலை நில வழியை, அல்லது மலையும் காடும் நெருங்கி அமைந்துள்ள ஒரு பகுதியைக் குறிக்கும் சொல்லாகும். நான்கு மலைகளின் நடுவே, நல்ல இயற்கைச் சூழலில் அமைந்திருத்தல் பற்றி, இக்கிராமத்திற்குச் திருச்சுரம் (திரு+சுரம்) என்று பெயர் வழங்குவதாயிற்று. திருச்சுரம் என்பதே திரிசூலம் என்று மருவி வழங்கி வருகின்றது. அதன் சாரணமாக அங்குள்ள நாதர் திரிசூல நாதர் எனப்படுகின்றார். பரமபுரீசுவரர் என்றும், இங்குள்ள சுவாமிக்குப் பெயர் வழங்கப்படுகிறது. அம்பிகைக்குத் திரிபுரசுந்தரி என்பது பெயர்.

கோயிலின் பழமை :

திரிசூலநாதர் கோயிலின் அமைப்பே, அதன் பழமைக்கும் பெருமைக்கும் சான்று பகர்கின்றது. இக்கோயிலின் கொடுங்கைகளும், கஜப்பிருஷ்டம் (தூங்கானை மாடம்) என்று சிற்பநூல் கூறும் முறையில், கருவறையின் பின்பகுதி அரை வட்டமாக அமைந்திருப்பதும், கோயிலின் சுற்றுச் சுவர் நெடுகிலும் கல்வெட்டுக்கள் பொறித்திருப்பதும், இவ்வுண்மையை உணர்த்தும். இக்கோயில் ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்று அறிஞர்கள் கூறுகின்றனர். பல்லவர், சோழர் காலத்துக் கட்டிட அமைப்பு முறைகள், இதன்கண் காணப்படுகின்றன.

இத்துணைப் பழமையும் பெருமையும் வாய்ந்த இக்கோயிலானது, எவருள்ளத்தையும் கவரத்தக்க, சிறந்த பல சிற்பங்களையும் பெற்றுள்ளது. இங்குள்ள அற்புதமான வடிவங்கள் எழில்குன்றாத சிறப்பு வாய்ந்தவையாகும். நாகத்தைப் பூணூலாக அணிந்த நாகயக்ஞோபவீத கணபதி, இடக்காலை வலக்கால் மீது மடித்துப் போடாமல் குத்திட்டு வீராசன நிலையில் அமர்ந்துள்ள தட்சிணாமூர்த்தி, முதலிய சிலைகள் மிகவும் சிறப்புடன் பொலிகின்றன. அங்ஙனமே பிரம்மா, விஷ்ணு துர்க்கை, மூலத்தானத்திலுள்ள அம்பிகை ஆகிய சிலைகளின் அழகும் கவர்ச்சியும் எவருள்ளத்தையும் கொள்ளை கொள்ளும்.

அழகிய சிற்பங்கள் :

இங்குள்ள சின்னஞ்சிறிய சிற்பங்களுங்கூட, நுட்பமான வேலைப்பாடு கொண்டவை. நுணுக்கமான உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பவை. உதாரணமாக, கருவறையில் சுற்றுச் சுவரின் நடுவிலுள்ள சிவலிங் கோற்பவ மூர்த்தியின் வடிவப், இயற்கையாக வடிக்கப்பட்டுள்ளது. விஷ்ணு, துர்க்கை சிலைகளின் மேற்புறத்திலுள்ள சின்னஞ்சிறு காளிய நர்த்தனர் சிற்பத்தில், ஐந்து தலை நாகம் கிருஷ்ணனின் பக்கமாக மிக வேகத்துடன் திரும்பிச் சீறும் காட்சி, பெரிதும் அருமையாக அமைந் துள்ளது. தட்சிணாமூர்த்தியின் திருவடியின் கீழுள்ள முனிவர்களின் மோன இன்பம் நமக்கும் இன்பம் ஊட்டுகிறது.

சைவ வைணவ சமரசம் :

இந்தக் கோயிலின் மற்றொரு பெரும் சிறப்பு, தூண்களிலுள்ள சிற்பங்களாகும். அவற்றில் பெரும்பாலனவை திருமாலின் திருவிளை யாடல்களைக் குறிக்கின்றன. கோயிலுக்குள் நுழைந்த உடனேயே நமக்கு இடப்புறமாக ஒரு பெருமாள் சந்நிதியிருப்பது குறிப்பிடத்தக்கது. சைவ வைணவ சமய சமரசத்திற்கு, இக்கோயில் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது எனலாம்.

முடிவுரை :

இப்பழைய சிறந்த கோயில், சென்ற ஆண்டில் பல சிறந்த திருப் பணிகள் செய்யப்பெற்று, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவும் நிகழ்த்தப் பெற்றிருப்பது, பெருமகிழ்ச்சிக்குரியது. கோயிலின் உட் புரத்தில் பளிங்குக் கற்கள் பதிக்கப் பெற்று, மிகத் தூய்மையாக வைக்கப் பெற்றுள்ளது. கோயிலில் மின்விளக்குகளும் சிறப்புற அமைக்கப் பெற்றுள்ளன; நவக்கிரகங்களின் சந்நிதியும் புதிதாக நல்லமுறையில் அமைக்கப் பெற்றுள்ளது. மரத்தால் இயன்ற சில வாகனங்கள் வண்ணம் தீட்டிப் பழுது பார்க்கப் பெற்றுள்ளன. வருவாய் பெரிதும் இல்லாத இக்கோயிலுக்குப் பல பக்தர்கள் நன்கொடை அளித்துப் பூசைகள் விழாக்கள் முதலியன செய்வித்து வருகின்றனர். சுவாமி சிவானந்தர் அவர்களின் "தெய்வீக வாழ்க்கைச் சங்கம்" இக்கோயிலில் பக்தர்கள் வந்து வழிபாடு முதலியன செய்யச் சிறந்த தொண்டாற்றி வருகின்றது. ஆண்டுதோறும் நவராத்திரியில் திரிபுரசுந்தர அம்பிகைக்கு இலட்சார்ச்சனை வைபவம் சிறப்புற நடத்தப் பெறுகின் றது. கந்தர்சஷ்டி விழா, ஆருத்திரா தரிசனம், மகாசிவராத்திரி முதலிய விழாக்களும் இங்குப் பக்தர்களாற் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின் றது. இங்ஙனம் நல்லமுறையில் வளர்ந்து வருகின்ற, பழமை மிக்க சிறந்த இந்தக் கோயிலை, அன்பர்கள் சென்று வழிபட்டு நலம் பெறுவார்களாக.



அருள்மிகு மீனாட்சியம்மையும் காமாட்சியம்மையும்

[புலவர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,]

முன்னுரை :

அகிலாண்ட கோடியெலாம் ஈன்ற அன்னையாய்ப் பின்னையும் கன்னி என மறைகள் பேச விளங்கும் அம்பிகைக்கு, எத்துணையோ பல பெயர்கள் உரியனவாக இருப்பினும், அவைகளிற் பெரிதும் போற்றி வழங்கப்பெறும் சிறப்புடைய பெயர்கள் சிலவற்றுள், மீனாட்சி காமாட்சி என்னும் பெயர் இரண்டும் குறிப்பிடத் தக்கனவாகும்.

மீனாட்சியும் காமாட்சியும் :

தமிழ்நாட்டில் எத்துணையோ பல சிறந்த நகரங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்த வரலாற்றுச் சிறப்புடைய நகரங்கள் ஒரு சிலவே. அவற்றுள்ளும் மிகவும் சிறப்புடையன வாகக் குறிக்கத் தக்கவை மதுரை, காஞ்சிபுரம் என்னும் இரண்டுமே யாகும். மதுரை பாண்டிய நாட்டின் தலைநகரம். காஞ்சிபுரம் பல்லவ மன்னர்களின் கோநகரம். உறையூர் காவிரிப்பூம்பட்டினம் முதலியன சோழ மன்னர்களுக்கும், வஞ்சி கருவூர் முதலியன சேர அரசர்களுக்கும் சிறப்புடைய தலைநகரங்களாக, ஒரு காலத்தில் விளங்கியிருந்தன. ஆயினும், அவைகளுக்கெல்லாம் இன்று தம் பண்டைப் பெருமையிற் குன்றிப் பொலிவிழந்து எளிய நிலையிலேயே உள்ளன. ஆனால், பாண்டிய வேந்தர்களின் தலைநகரமாகத் திகழ்ந்த மதுரையும், பல்லவ அரசர்களின் தலைநகரமாக விளங்கிய காஞ்சியும், ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, இன்றளவும் பெரிதும் சிறப்புற்றுப் பிறங்கி வருகின்றன. இதற்குக் காரணம் மதுரைமாநகரில் மீனாட்சி யம்மையும், காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மையும் எழுந்தருளி வீற்றிருந்து விளங்கிக் காத்து வருதலே யாகும். இவ்வுண்மை பற்றியே இவ்விரு பெரு நகரங்களுக்கும், "கன்னி காப்பு" எனவும் ஒரு பெயர் வழங்கி வருகின்றது.

மீனாட்சி :

மீனாட்சி, காமாட்சி என்னும் இரு பெயர்களும் மிகுந்த பொருட் செறிவுடையனவாக விளங்குகின்றன. மீனம்-மீன். அட்சம்-கண். அட்சி-கண்ணை யுடையவள். மீன + ஆட்சி-மீனாட்சி. மீன் போன்ற கண்ணையுடையவள் என்பது பொருள்.

கோழி, முட்டையின்மேல் அடை காத்துக் கிடந்த பக்குவம் நோக்கி முட்டையைப் பிரித்துக் குஞ்சுகளை வெளிப்படுத்தும். ஆமை, கடலின் கரையிலே சேமித்து வைத்த தன் முட்டைகளைத் தான் சேய்மையிற் சென்று நினைவுகூர்ந்து, அந்நினைவின் ஆற்றலாற் குஞ்சு பொரிக்கச் செய்யும். மீன் தன் சினைகளைக் கண்ணாற் பார்த்து நின்று, அக்கட் பார்வையின் திறனால், அவற்றினின்று குஞ்சுகள் தோன்றச் செய்து காப்பாற்றும்.

மீன் தன் கட்பார்வையின் ஆற்றலினால் முட்டைகளினின்று குஞ்சு பொரித்து வெளிப்படச் செய்து அவற்றைப் பாதுகாக்கும் செயல்போல, உலகத்துயிர்களை யெல்லாம் தனது அருள் கனிந்த கடைக்கண் பார்வையின் ஆற்றலால் பாதுகாத்து நலம்புரிந்தருளும், அம்பிகைக்கு மீனாட்சி எனச் சான்றோர்கள் பெயரிட்டு வழங்குவாராயினர்.

காமாட்சி :

இங்ஙனமே காமாட்சி என்னும் திருப்பெயர்க்கும் சிறந்த பல பொருள்களைப் பெரியோர்கள் கூறுவர். கா+மா+ஆட்சி, கா-சரசுவதி. மா-இலக்குமி. ஆட்சி-கண்ணாக உடையவள். சரசுவதியையும் இலக்குமியையும் தனக்குக் கண்களாக உடையவள் காமாட்சி எனப்படுவள். எனவே, கல்வி நலனையும் செல்வ நலனையும் ஒருசேரத், தன் அடியார்களுக்குத் தன் கடைக்கண் பார்வையால் விளைத்துக் கொடுத்து, நலம் புரியும் திறம் வல்லவள் காமாட்சி என்பது கருத்து.

இனி, காமம்-விருப்பம். காம+அட்சி-காமாட்சி எனக் கொண்டு ‘அடியார்கள் விரும்பி நினைத்தவற்றை யெல்லாம் தரும் அருள்நோக்கம் உடையவள்’ என்றும்; க+அ+ம+அட்சி எனப் பிரித்துக் கொண்டு க-பிரமனையும், அ-திருமாலையும், ம-உருத்திரனையும், அட்சி-கண்ணாற் படைப்பவள் என்றும், பிறவாறும் பொருள் கூறுவதுண்டு.

பெண்மைப் பண்புகள் :

மீனாட்சியும் காமாட்சியும் ஆகிய அம்பிகையின் இயல்புகள், பெண்ணினத்திற்கு அமைய வேண்டிய அரும்பெறற் பண்புகள் இவை யிவை என்பதை இனிது உணர்த்துவன ஆகும். தமிழ்நாட்டுப் பெண் மகளிர் ஒவ்வொருவரும் எவ்வெவ்வகைப் பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதற்கு, மீனாட்சியம்மையும் காமாட்சியம்மையும் எடுத்துக் காட்டுக்களாக விளங்குகின்றனர் எனலாம்.

ஒவ்வொரு பெண்ணும் தன்னை மணந்து கொண்ட கணவனுக்குப் பலவகை மாட்சிமைகளும் அமையும்படி ஒழுகுதல் வேண்டும். செல்வம் மிக்க கணவனை மணந்து கொண்டு அவ்வாற்றால் தான் புதிய சிறப்பைப் பெற்று வாழ்வதைவிட, ஏழைக் கணவனேயாயினும் தன்னால் அவன் சிறப்புற்று வாழும்படி செய்யவல்ல பெண்மகளே சிறப்புடையவள் ஆவாள். கணவனால் சிறப்பைப் பெறும் மனைவியைவிட, கணவனுக்குத் தன்னாற் சிறப்பை யுண்டாக்கும் மனைவியே, சிறந்த பெண்ணின் நல்லாள் என மதிக்கப் பெறுவாள். மனைவியின் குணமாட்சிமையால் வறுமைமிக்க கணவனும் பெருவளம் பெறுவதுண்டு. ‘இவள் வந்த பின்னரே இவ்வீட்டில் இவன் இவ்வளவு செல்வமும் வாழ்வும் பெற்றான்’ என ஊரார் கூறுமாறு ஒரு பெண் வாழ்தல் வேண்டும். (குறுந்தொகை)

கணவனை உயர்த்தும் மனைவி :

மீனாட்சியம்மையாகிய தடாதகைப் பிராட்டியை மணந்து கொண்டதனால், சுந்தரபாண்டியன் ஆகிய சிவபெருமான், பல சிறப்புக்கள் பெற்றான். சடை கட்டியிருந்த அவன், மணிமகுடம் தரித்தான்; கொன்றைமாலையைப் போட்டிருந்த அவன், பாண்டியர் குலத்து வேந்தர்களுக்குரிய வேப்பம் பூ மாலையைச் சூட்டினான்; பாம்புகளை அணிகலன்களாகக் கொண்டிருந்த அவன், மாணிக்கச் சுடர்ப்பூண் ஏந்தினான்; விடைக்கொடியை நீக்கிக் கயற்கொடியை எடுத்தான்; ஆண்டியாக இருந்த அவன், பாண்டியனின் மருமகனாகி உலகம் முழுவதையும் அரசாட்சி செய்தான். இவை எல்லாம் மீனாட்சியால் வந்த வாழ்வு தானே, சோமசுந்தரப் பெருமானுக்கு.

இங்ஙனம் சொக்கநாதர் ஆகிய சிவபெருமான் பெற்ற சிறப்பெல்லாம், அவர் சொக்கநாயகி ஆகிய மீனாட்சியை மணந்து கொண்ட மாட்சிமையால் விளைந்த பயன்களேயாகும் எனலாம். ஏனெனில், "மீனாட்சியை மணப்பதற்கு முன்னர்ச் சொக்கநாதர் ஆனையை உரித்து, அதன் தோலைத்தான் போர்த்துக் கொண்டிருந்தார்; அருச்சுனனால் வில்லடியும், கண்ணப்பரால் செருப்படியும், அரிமர்த்தன பாண்டியனால் பிரம்படியும் பட்டார்; மானம் அழிந்து அங்கங்கே இரந்து பிச்சை எடுத்துத் திரிந்து கொண்டு இருந்தார். சொக்கநாயகியாகிய மீனாட்சியை மணந்து கொண்ட பின்னரோ, பாண்டியன் மருமகனாகி எல்லாப் பெருமைகளையும் எய்தி உலகங்களை யெல்லாம் ஆளத் தலைப்பட்டார். இத்தகைய பெருவாழ்வு மீனாட்சியம்மையினால்தான், சோமசுந்தரப் பெருமானுக்குக் கிடைப்பதாயிற்று. ஏர் பிடித்தவன் யாது செய்தல் கூடும்? யாவும் பானை பிடித்தவள் பாக்கியமே யன்றோ" என்று பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் என்பவர் அழகுறப் பாடியுள்ளார். மீனாட்சியம்மையினால் தான் சொக்கநாதப் பெருமான் அரச வாழ்வு பெற்றார். சுந்தர பாண்டியன் என்னும் பெயர் தாங்கிப் பாண்டிய நாட்டை அரசாண்டார்.

குடும்பம் நடத்தும் குணவதி :

இனி, ஒரு பெண்ணின் நல்லாள் குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற குணங்கள் (மனைத்தக்க மாண்புகள்) உடையவள் ஆகவும், தன் கணவனின் வருவாய்க்கு ஏற்றபடி அளவறிந்து குடும்பம் நடத்தும் இயல்பு (மனைமாட்சி) வாய்ந்தவள் ஆகவும் இருப்பது இன்றியமையாதது ஒரு குடம் நீராற் சோறுசமைத்து உண்ணுமாறு வறுமை நேர்ந்த காலத்தும் இனிமை கலந்த நன்மொழியும், கணவன்மேற் காதலும், குடும்ப வாழ்க்கைக்குரிய நல்லியல்புகளும் உடையவளாய் கடல்நீரை எல்லாம் வற்ற உண்ணும் அளவிற்குப் பெருந்திரளான சுற்றத்தார் ஒருங்கேவரினும், செல்வம் நிறைந்திருந்தாற் போல மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரிப்பவளாய், மிகவும் திறம்படக் குடும்பம் நடத்துதலைக் குறிக்கோளாகக் கொண்டு, ஒரு சிறந்த பெண்மகள் ஒழுகுதல் வேண்டும்.

ஒரு குடும்பப் பெண்ணுக்குரிய இவ்வியல்பிற் சிறந்து திகழ்ந்து எடுத்துக் காட்டாக விளங்குபவள் காமாட்சியம்மை. தன் கணவன் ஆகிய சிவபெருமான் அளித்த இரண்டு நாழியளவு நெல்லைக்கொண்டே இவ்வுலகில் 32 அறங்களையும் காமாட்சியம்மை குறைவறச் செய்து முடித்தாள்.

காமாட்சியம்மையின் வேறு சில பண்புகளும் ஈண்டுக் கருதத் தக்கன. கற்புடை மனைவிக்குக் கணவனை என்றும் நீங்காதிருந்து போற்றி வழி படுதல், ஒருதலை சிறந்த கடமையாகும். கொழுநற் றொழுதெழுதல், குடும்பம் பேணும் குலமகளிர்க்கு உரிய அழகு: காமாட்சியம்மை திருவேகம்பநாதரை என்றும் முடிவிலாப் பூசை இயற்றிவரும் திறனைப் பெரியபுராணம், காஞ்சிப்புராணம் முதலிய அருள்நூல்கள் விளக்கி யுரைக்கின்றன. மேலும், இறைவனை குழையும்படி அம்மை தழுவிய செயல், கணவன் முரடனாக இருப்பினும் மனைவி தன்னுடைய மென்மைப் பண்பால் அவனை நல்வழிப்படுத்தும் கடப்பாடு உடையவளாவாள். என்பதைப் புலப்படுத்துகின்றது எனலாம்.

மீனாட்சியும், காமாட்சியும் :

இங்ஙனம் கடவுட் பண்பு நலன்களையெல்லாம், நாம் நம் கற்றறிவும் சிற்றறிவும் கொண்டு கருதி அளந்தறிய முற்படுதல், நமக்கு எளிதில் இயல்வதொன்று அன்றாயினும், இங்ஙனம் கடவுட் கோட்பாடுகளின் தத்துவ நுட்பக் கருத்துக்களைத் தக்காங்கு ஓரளவேனும் உணர்ந்து கொள்ள முயலுதல் நலம் பயப்பதேயாகும். *

(1) மீனாட்சியம்மை பெண்ணரசி (பெண்களுக்கெல்லாம் அரசியாகச் சிறந்து திகழ்பவள், பெண்ணாக விளங்கியும் திறம்பட அரசாட்சி செலுத்தியவள்).

(2) காமாட்சியம்மை பெண்ணின் நல்லாள். இவ்வாறே பெரிய புராணம் காமாட்சியம்மையைக் குறிப்பிடுகின்றது. ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் காமாட்சியம்மையைப் "பெண்ணின் நல்லவள் ஆயின பெருந்தவக் கொழுந்து" எனச் சிறந்தெடுத்துக் கூறிப் போற்றுகின்றார்.

(3) மீனாட்சியம்மை கணவனை உயர்த்தும் மனைவியாக விளங்கு கின்றாள்; காமாட்சியம்மை கணவனை வழிபடும் மனைவியாகத் திகழ்கின்றாள்.

(4) "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்" எனப் பாரதியார் பாடுவது போல, மீனாட்சியம்மை அரசியல் வினைமாட்சியில் வல்ல புதுமைப் பெண்போலப் பொலிகின்றாள்.

(5) காமாட்சியம்மையோ சிக்கனமும் செம்மைத்திறமும் உடைய வளாய், இல்லறம் நடத்தும் மனைமாட்சியில் வல்லவளாக வயங்கு கின்றாள். சுருங்கக் கூறலுறின், துரைத்தனத்திற்கு மீனாட்சியும், குடித்தனத்திற்குக் காமாட்சியும் இணையற்ற எடுத்துக்காட்டாக் விளங்கு கின்றனர் எனலாம்.

(6) பெண்மையின் பெருமிதம் மீனாட்சியாகவும், அருளியல்பு காமாட்சியாகவும் பிறங்குகின்றன. மீனாட்சி பசுமைநிறம் (செல்வச்

* "Let us, then, if you please, in the first place, announce to the gods that we are not enquiring about them; we do not presume that we are able to do so; but we are only enquiring about the meaning of men in imagining their forms and worshipping them."

—Socrates, in Plato's Cratylus.

செழிப்பு) உடையவள்; காமாட்சி பொன்மை நிறம் (பண்பாட்டின் தூய்மைச் சிறப்பு) வாய்ந்தவள். உலகியல் வாழ்வில் மக்களுக்குச் செல்வச் செழிப்பும், பண்பாட்டுச் சிறப்பும் ஆகிய இரண்டும் வேண்டும் என்னும் உண்மையை, அருளுருவாகிய அம்பிகையின் இவ்விரு கூறுகளும் நமக்குச் செவ்விதிற் புலப்படுத்துகின்றன.

முடிவுரை :

"உலகப் படைப்பில் மிகவும் அழகும் கவர்ச்சியும் உடையவர்கள், கடவுளின் கலைத்திறனில் இறுதியாயும் இணையற்றும் சிறந்து விளங்குபவர்கள் காணவும் கருதவும் படக்கூடிய எல்லா நலங்களும் சிறப்புறப் பொருந்திப் புனித-தெய்விக-நல்ல-விழைதக்க இனிய நிலையில் திகழ்பவர்கள்" † என ஜான்மில்ட்டன் என்னும் ஆங்கிலப் பெருங்கவிஞர் புகழ்ந்து கூறும் பெண்குலத்திற்கே, இணையற்ற இனிய எடுத்துக்காட்டாக எல்லாவகைகளிலும் சிறந்து விளங்கும் மதுரை மீனாட்சியம்மையையும், காஞ்சி காமாட்சியம்மையையும் நாம் நம் மனமொழி மெய்களினால் நன்கினிது வழிபட்டு நலம் பெற்று உய்ய முயலுவோமாக.

---

† "O woman! Fairest of creation! Last and best
Of all God's works! Creature in whom excelled
Whatever can to sight or thought be formed
Holy, *Divine*, *Good*, *Amiable* and *Sweet*."

—John Milton.



அறிவாராய்ச்சியியலில் ஆதிக்கக் கொள்கை

[வித்துவான் திரு. வை. இரத்தினசபாபதி, எம்.ஏ., பி.ஓ.எல்.,]

முன்னுரை :

அறிவாராய்ச்சியியல் (Epistemology) ஒரு தனித்துறையாகவே வளர்ச்சி பெற்று வந்துள்ளது என்பதும், மனோதத்துவ இயல், அளவையியல், அடிப்படைத்தத்துவ இயல் ஆகியவைகளோடு அறிவாராய்ச்சியியலும் தொடர்புடையதே எனப் பொதுவாகக் கருதப் பெற்றாலும், அறிவாராய்ச்சியியலானது தனக்கே உரிய தனித்த இயல்புகள் பலவற்றை உடையது என்பதும் 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற இப்பகுதியில் முன்னே எழுதப் பெற்ற கட்டுரைகளில் விளக்கப் பெற்றன.

"மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்று திருவள்ளுவர் அறிவின் இலக்கணத்தை வரையறை செய்வதற்குச் சில அடிப்படைக் காரணங்கள் இருந்திருக்க வேண்டும். ஒரே பொருளைப் பலர் பலவாறு விளக்கிக் கூறுதலும், சூழ்நிலைகளுக்கேற்ப ஒரு சிலர் தாம் கருதிய கருத்துக்களை வெளிப்படையாகக் கூறாமல் இலைமறை காய்போலக் கூறுதலும் திருவள்ளுவர் காலத்திலும் இருந்திருக்க வேண்டும். ஆனால் எல்லாக் காலங்களிலும் அறிவானது தனக்குச் சரி என்று ஏற்றுக் கொள்ள முடியாதவைகளைப் பொய் என மறுத்து ஒதுக்கித் தள்ளியே வந்திருக்கிறது என்பதையும் நாம் மறுக்க முடியாது.

சில கருத்துக்களை உண்மையானவை என்று அறிவானது ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பாடுபட்டுழைத்த கொள்கைகள் சில உண்டு. அறிவாராய்ச்சியியலானது தொடக்கத்திலேயே, உண்மைக் கருத்துக்களை அறிவுக்கு எடுத்து வழங்கக் கூடிய சில ஆதாரக் கொள்கைகளை எடுத்து ஆராய முற்படுகிறது. அவைகளில் முக்கியமான கொள்கைகள் மூன்று. அவற்றுள் முதலாவதாக அமைவது ஆதிக்கக் கொள்கை. அதன் விரிவை இங்கே காணலாம்.

ஆதிக்கக் கொள்கை: Authoritarianism என்ற சொல் ஆதிக்கக் கொள்கை என்றும் ஆட்சிக் கொள்கை என்றும் மொழிபெயர்க்கப் பெறுகிறது. நாள்தோறும் எழுகின்ற வாழ்வியற் பிரச்சினைகள் பல. பிரச்சினைகளை முழுமையாக ஆராய்ந்து முடிவுகாண்பதற்குரிய நேரமோ, திறமையோ, அக்கறையோ பலருக்கு அமைதல் இல்லை. பிரச்சினைகளையோ தீர்த்தாக வேண்டும். இத்தகைய இடர்ப்பாட்டில் ஆதிக்கக் கொள்கையானது உள்நுழைந்து பணியாற்றுகிறது. அறிவாராய்ச்சியியற் பிரச்சினைகள், வாழ்வியற் பிரச்சினைகள் ஆகியவற்றில் தக்க முடிவுகளை மேற்கொள்ளுவதற்கு ஆதிக்கக் கொள்கையானது நான்கு வழிகளில் பணியாற்றுகிறது.

(1) மதிப்பு மிக்கார் ஆதரவு: சமுதாயத்தில் செல்வாக்கு உடையவர்கள் ஆட்சித்துறையில் மதிப்புடையவர்கள் எந்தக் கருத்தை ஆதரிக்கிருர்களோ அந்தக் கருத்து உண்மை என ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது. இங்கே குறிக்கப் பெறுகிற ஆட்சி அல்லது ஆதிக்கம் என்ற சொற்களுக்கு வரையறை செய்யப் பெற்ற பொருள் உண்டு. சமுதாயத்தில் ஒருவன் என்ன அடிப்படையில் செல்வாக்குப் பெற்ருன் என்பது ஆராய்ச்சிக்குரியதன்று. செல்வாக்குப் பெற்று விட்ட பிறகு அவன் தனக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத செய்திகளைப் பற்றி, ஒரு முடிவைச் சொல்வானேயாளுல், அவன் கூறிய முடிவும் உண்மை என ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது. பொதுமக்களால் நன்கு மதிக்கப் பெறும் நிலையைப் பொதுமக்களின் உள்ளங்களில், தான் நல்லவன் என ஆட்சி செய்யும் நிலையை-ஆதிக்கம் செய்யும் நிலையை அவன் உண்மையாலும் உழைப்பாலும் தான் பெற்றிருக்க வேண்டும். எனவே அவன் கூறும் முடிவு உண்மையானதாகத் தான் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இக்கொள்கை வளர்ந்தது. உண்மையோ உழைப்போ இல்லாமலேயே வேறு வேறு வழிகளில் ஒருவன் சமுதாயத்தில் மதிக்கப் பெறும் நிலையைப் பெற்றுவிட்ட காரணத்தால் காலப்போக்கில் இக்கொள்கையில் தவறு நிகழவும் தொடங்கியது. இத்தகைய ஆதிக்கக் கொள்கை சிறப்பிடம் பெற்றது. நாளடைவில் வேறு துறைகளில் உள்ளவர்களின் செல்வாக்கை நோக்கி, அவர்கள் சொல்லும் முடிவுகளையும் மனிதன் உண்மை என ஏற்றுக் கொள்ளத் துணிந்து விட்டான். இக்கொள்கையில் உள்ள குறைகளை எடுத்துக்காட்டப் பயன்படுத்தப் பெறும் கீழ்க் கண்ட சில பழமொழிகளையும் நாம் சந்திக்கிருேம்.

"அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை அம்மியையும் உடைக்கும்"
"ஏழைசொல் அம்பலம் ஏருது"

(2) பெரும்பான்மையினர் ஆதரவு: ஆதிக்கக் கொள்கையின் இரண்டாம் வழி இது. பெரும்பாலான மக்களால் ஆதரிக்கப் பெற்ற ஒருவர்-பெரும்பாலான மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவர் கூறும் முடிவு உண்மையானது என்பதை முன்னே கண்டோம். இங்கே பெரும்பான்மையான மக்கள் எந்த முடிவைக் கொண்டிருக்கிருர்களோ அந்த முடிவு உண்மையானது என்பதே. முன்னே உள்ள பிரிவில் சிந்தனையாளன் ஒருவனே. பெரும்பாலான மக்களின் உள்ளங்களில் அவன் ஆதிக்கம் செலுத்துகின்ற காரணத்தால் அவன் கொள்ளும் முடிவு பலருக்கும் உண்மை ஆகிறது. இரண்டாம் பிரிவில் பெரும்பான்மையான மக்களின் சிந்தனை தேவைப்படுகிறது. சற்றேறக் குறைய, சம்பந்தப்பட்ட எல்லாருமே சிந்திக்கிருர்கள். பெரும்பான்மைச் சிந்தனையாளர்கள் ஒரு முடிவுக்கு வருகிருர்கள். பெரும்பாலான மக்கள் ஏற்றுக் கொள்ளும் கருத்து எதுவோ அது உண்மையானது என்பதே. பெரும்பாலான மக்களின் உள்ளங்களில் ஆட்சி செலுத்தும் கொள்கை அல்லது ஆதிக்கம் செலுத்தும் கொள்கை என இதற்கு விளக்கம் கூறப் பெறுகிறது.

மக்களாட்சியில் மலர்ந்து வரும் கருத்து இது. வாழ்வியற் பிரச்சினைகளுள் பெரும்பான்மையானவைகளை இம்முறையினுல்தான் முடிவுக்குக் கொண்டு வருகிருர்கள். பெரும்பான்மை என்ற அடிப்படையில் முடிவு செய்யலாம் என்ற கொள்கையை அறிவாராய்ச்சியியலானது நுணுக்கமாகச் சிந்திக்கிறது பெரும்பான்மைபற்றி முடிவு செய்தல் என்ற இக்கொள்கைபற்றி அறிவாராய்ச்சியியல் கூறும் விளக்கங்களையும் நாம் சிந்தித்தல் வேண்டும்

அறிவியல் அடிப்படையில் ஒன்றைச் சிந்திக்கும்போது மாறுபட்ட கருத்துக்கள் எழுதல் இயற்கையே. அறிவு வேறுபாடுகளும் சிந்தனை வேறுபாடுகளும் உள்ளவரையில் கருத்து மாறுபாடுகளும் இருக்கவே செய்யும். கருத்து மாறுபாடுகள் இல்லையானால் வளர்ச்சியும் கூட இல்லை என்றே சொல்லுதல் வேண்டும். பல்வேறு மனிதர்கள் பல வேறு வகையான அறிவியல் நிலைகளில் நின்று ஒன்றைச் சிந்திக்கும் போது மூன்று வகையான படிமுறைகள் காணப்பெறும் என அறி வாராய்ச்சியியல் கருதுகிறது.

(அ) பல்வேறு வகைப்பட்ட சிந்தனையாளர்கள் ஒரு பிரச்சினையை ஆராய்ந்து ஒரே முடிவை வழங்குவதும் உண்டு. இவ்வாறு அமைதல் அரியதேயெனினும் இவ்வாறு நடைபெற்றமைக்குச் சான்றுகள் உண்டு.

(ஆ) இரண்டாம் வகைச் சிந்தனை முறைக்கு அறிவாராய்ச்சியிய லானது "ஏற்றுக் கொள்ளும் முறை" என்ற பெயரை இட்டு வழங்குகிறது.

சிந்தித்தல் என்பது ஒரு கலை. அதை முறையாக வளர்த்துக் கொள் வதில் ஒரு சிலர் அக்கரை காட்டுவதே இல்லை. உலகப் பெருஞ் சிந்தனையார்கள் என்ற பெயரை வாங்காவிட்டாலும், நாம் மிருகமல்லர்; மனிதர்கள் என்பதை நிலைநாட்டவாவது ஓரளவு சிந்திக்க வேண்டாமா? இது ஒருவகைப் பொறுப்பற்ற தன்மை. ஒரு சிலர் ஒரு கருத்தை முறையாகச் சிந்திக்கக் கூடிய ஆற்றல் இல்லாதவராக இருக்கலாம், அட்படியிருப்பின் அது இயலாமை. ஒரு சிலர் முறையாகச் சிந்திப்பதற் குரிய காலம், கருவிகள் முதலியவைகள் கிடைக்கப் பெருதவர்களாக அமையலாம். அப்படியிருப்பின் அது இரங்கற்பாட்டிற்குரியது. பொறுப்பற்ற தன்மை, சிந்திக்க இயலாமை. காலம் சூழ்நிலை அமையாமை முதலிய காரணங்களால் சிந்திக்காதவர்கள் பொதுவாக மற்றவர் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்வார்கள். இவர்களால் கருத்துக்கோ அல்லது சிந்தனை விளைவுக்கோ உரிய ஆக்கமோ ஊக்கமோ தர இயலாது. இரண்டு நாள் அவகாசம் கொடுத்து என்ன முடிவை எடுத்தீர்கள்? என்று கேட்டால் கூடச் சொல்ல மாட்டார்கள். இப்படிப் பட்டவர்கள் பிறர் கூறும் முடிவை அப்படியே ஏற்றுக் கொள்வார்கள்.

வேறு ஒரு நிலையையும் இங்கே குறிப்பிட வேண்டும். சிறந்த சிந்தனையாளர்களுங் கூட, சிந்தனை செய்யாமலேயே சில முடிவுகளை ஏற்றுக் கொள்வது உண்டு. எடுத்துக் காட்டாக ஒன்றைக் கூறலாம். காந்தியடிகளும் சிறந்த சிந்தனையாளர்களும் ஒன்ருக அமர்ந்து ஒன்றைச் சிந்திக்க முற்படுவதாக வைத்துக் கொள்வோம் சுருங்கக் கூறின், சிறந்த சிந்தனையாளர்களுங்கூட இங்கே சிந்திப்பதில்லை. ஏன்? காந்தி யடிகளிடம் அவர்கள் கொண்டிருந்த மதிப்பு, பெருமை ஆகியவைகளே காரணம். இதுதான் முழுமையான ஏற்றுக்கொள்ளும் நிலை. ஆதிக்கக் கொள்கையின் உன்னதமான நிலை இதுதான். ஆதிக்கக் கொள்கை அல்லது ஆட்சிக் கொள்கை முதன்முதலில் உருப்பெற்ற நிலை இங்கே தான். இவ்வகையைத்தான் 'மதிப்பு மிக்கார் ஆதரவு' என இக்கட்டுரை யில் முன்னே குறிப்பதைக் காணலாம்.

(இ) மூன்ரும் முறைப் படிவளர்ச்சியில் அமையும் சிந்தனைக்கு ஒத்துக் கொள்வது அல்லது ஒத்துக் கொள்ள வைப்பது என்பது பெயர். ஒமே கருத்தைப் பலரும் பலவேறு கோணங்களிற் சிந்திக்கலாம். மாறுபட்ட முடிவுகள் வரும்போது, ஒரு முடிவைக் கொண்டவர்கள் மற்றவர்களைத்

தம்பக்கம் இழுக்க முயலுவது உண்டு. பெரும்பான்மை சிறுபான்மை என்ற அடிப்படைகளெல்லாம் இங்கே ஆராயப் பெறும். பெரும் பான்மை காரணமாக ஒரு முடிவுக்கு வரும்போது ஏனையோர்கள் அம் முடிவை ஒத்துக் கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப் பெறுகிறது. இங்கே, பெரும்பான்மையோர் கொள்ளும் முடிவை ஏனையோர் ஒத்துக் கொள்வது உண்டாகிறதே, அந்த ஒத்துக் கொள்வது என்பதன் உண்மைப் பொருள் என்ன? மறுக்கத் தெரியவில்லை என்பதே நேரான விடை. எடுத்துக் காட்டாக ஒன்றைக் காணலாம்.

திருக்கோயில்களில் பள்ளிக்கூடம் வைக்க இடம் கொடுக்கலாமா? என்பது ஆய்வுப் பொருள். நீண்ட சிந்தனைக்குப் பிறகு 'கொடுக்கக் கூடாது' என்ற முடிவைப் பலர் மேற்கொண்டார்கள். சிலர் அதை எதிர்த்தார்கள். கொடுக்கலாம் என்ற கருத்தைத் தம் சிந்தனையின் முடிவாகக் கொண்டிருந்த சிலர் இறுதியில் கொடுக்கக் கூடாது என்ற என்ற கருத்தை ஒத்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஒத்துக் கொண்ட சிறுபான்மையினர் என்ன நிலையில் ஒத்துக் கொண் டார்கள்? பெரும்பான்மையினர் சிந்தித்து சிந்தனையின் முடிவு சரியான சிந்தனையின் விளைவு; நாம் தவருகச் சிந்தித்ததால் இம்முடிவுக்கு வந்தோம் என்று கருதியா ஒத்துக் கொண்டார்கள்? இல்லை. பெரும் பான்மையினர் கருத்தை மறுப்பதற்குரிய கருத்துக்கள் நம்மிடம் இல்லை என்பதே. எனவே ஒத்துக் கொள்வது என்பது மறுப்பதற்குரிய கருத்துக்கள் இப்போது நம்மிடம் இல்லை; வாய்ப்பு நேருங்கால் பார்த்துக் கொள்ளலாம் என எண்ணி அடங்கிப் போவதுதான். இது ஒருவகை யான கருத்துத் திணிப்பு முறையே. இது நோயாளியின் நோயை வேரோடு அப்புறப்படுத்தாமல் அப்போதைக்குச் செயல்படாமல் அடக்கி வைப்பது போலத்தான்.

இவ்வகையைத் தான் 'பெரும்பான்மையினர் ஆதரவு' என ஆதிக்கக் கொள்கை வகுத்துக் காட்டுகிறது.

(3) கால நீடிப்பு: சில கருத்துக்கள் நீண்ட காலமாக வழக்கில் இருந்து வருமானல் அவை உண்மையானவை என்று கருதப் பெறுகின் றன நீண்ட நாட்களாக நிலவி வருகின்ற காரணத்தாலேயே அவைகள் ஏற்கத் தக்கவை என்று பலரும் வாதம் செய்வதைக் காண லாம். சில மூடப் பழக்க வழக்கங்கள் கூட, நீண்ட கால ஆட்சி காரணமாக உண்மையானவை என்று கருதப் பெறுகின்றன. இதிலும் ஒரு விந்தை நிலவுவதைக் காணலாம்.

ஆழ்ந்த கல்வியும், நுண்ணறிவும், தெளிவான சிந்தனையும் உள்ள துறவி ஒருவர் 'சாதிகள் இல்லை' என்று இருபதாம் நூற்ருண்டில் பேசினுர். மக்கள் அவரைப் புரட்சிக்காரர் என்றனர். புரட்சிக்காரர் என்ற சொல்லின் பொருள் என்ன? நீண்ட காலமாக நிலவிவரும் கருத்தை-சாதி உண்டு என நீண்ட கால ஆட்சியிலிருந்து வரும் கருத்தை எதிர்த்ததால் அவர் புரட்சிக்காரர். சாதிகள் பல பேசுவோர் சழக்கர்கள் என்று கி.பி. 7 ஆம் நூற்ருண்டில் அப்பரடிகள் பேசுனுரே! கி.பி. 5 ஆம் நூற்ருண்டில் "ஒன்றே குலம் ஒருவனே தேவனும்" என்று திருமூலர் கூறினுரே! சாதி உண்டு, சாதி இல்லை என்ற இரண்டு கருத்துக்களுள் காலத்தால் முந்தியது எது?

எந்த ஒரு கருத்தானது காலங் கடந்து நிற்கும் தன்மையுடையதோ அது உண்மை என்று ஒரு சிலர் வாதம் செய்வது உண்டு. இத்தகைய வாதத்தின் அடிப்படையில்தான் மூடப் பழக்க வழக்கங்கள், சில

தவருன கருத்துக்கள் நம்மிடையே நிலவி வருகின்றன. இத்தகைய மூடப்பழக்க வழக்கங்கள் நின்று நிலவுவதற்குக் 'காலநீட்சி' என்ற ஒரு காரணத்தைத் தவிர வேறு காரணம் இருப்பதாகக் கொள்ளவும் முடியவில்லை.

(4) தகுதி: தகுதி காரணமாகச் சில கருத்துக்கள் உண்மை என ஏற்கப் பெறுகின்றன. அறிவு சான்ற மருத்துவர் நோயாளியின் நோய் நிலை குறித்துக் கூறுவதை உண்மை என ஏற்றுக் கொள்கிருேம். தயக்கமின்றி நாம் ஏற்றுக் கொள்வதற்குக் காரணம், நோயினை நாடி உரைப்பவர் தகுதி வாய்ந்த மருத்துவர் என்பதனுலேயே. சில விஞ்ஞானக் கருத்துக்களை நாம் உண்மை என ஏற்பதற்குக் காரணம் அவைகள் தகுதி வாய்ந்த விஞ்ஞானிகளால் கூறப்பெற்றன என்ற காரணத்தினுலேயே. ஆனுல் இத்துறையிலும் காலப்போக்கில் தவறு நிகழக் காண்கிருேம். தவற்றுக்கே இடமில்லாத துறையில் தவறு வருமா? அதற்குரிய காரணங்கள் இரண்டு. ஒன்று: மருத்துவரின் தகுதி அவருடைய அனுபவத்தாலோ, பல நோய்களைத் தீர்த்து வெற்றி கண்ட தேர்ச்சியாலோ நிர்ணயிக்கப் பெருமல் அவர் படித்துத் தேறிய-நெட்டுருச் செய்து எழுதிய செயல்களை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழகத்தாரால் தரப்பெறும் உறுதிச் சீட்டை (Degree) அடிப்படையாக வைத்து நிர்ணயித்தல். ஒரு மருத்துவர் கூறுவது சரியன்று என இன்னெருவர் மருத்துவர் மறுக்கிருர். நோயாளிகளையே ஆய்வுக் கூடங்களாக வைத்து ஆய்வு நடத்துவர்களையும் காண முடிகிறதே! மற்றென்று: தகுதி வாய்ந்த மருத்துவர் ஒருவர் அவருடைய துறையாகிய மருத்துவத் துறையோடு நின்று முடிவு செய்யுங் கருத்துக்கள் தவருகா. அத்துறை குறித்த உண்மைகளை உறுதியோடு உரைக்கலாம். அவருடைய தகுதி குறித்து மற்றவர்களும் அவைகளை உண்மைகள் என உறுதியுடன் ஏற்கலாம். ஆனுல் அவர் பொருளாதாரத்துறை அரசியல் துறை போன்றவைகளில புகுந்து சில முடிவுகளைச் சொல்வாரானுல் அவைகளையும் உண்மை என எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? ஒரு துறையில் உள்ள தேர்ச்சி அல்லது தகுதி பிறதுறைகளுக்கும் பொருந்தும் என்று எவ்வாறு கூற முடியும்.

முடிப்புரை:

மேலே கூறப் பெற்றவைகளால் மதிப்பு மிக்கார் ஆதரவு, பெரும்பான்மையினர் ஆதரவு, காலநீடிப்பு, தகுதி ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு ஆதிக்கக் கொள்கை உண்மை நாட்டத்துக்குத் துணை செய்தது என்பதைக் காணலாம். எவ்வாருயினும் ஆதிக்கக் கொள்கையை ஒரு வலுவான கொள்கையென அறிவாராய்ச்சியியல் ஒப்பவில்லை. விஞ்ஞானம், கலை, அரசியல், சமயம் ஆகிய துறைகளிலும் பிறதுறைகளிலும் முரண்பாடான கருத்துக்கள் பல தோன்றுகின்றன. அவைகளுள் தகுந்தவைகளை, ஏற்புடையவைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு உரிய அளவுகோலாக ஆதிக்கம் விளங்காது. சிலசமயங்களில் சில கருத்துக்களை ஆதிக்கம் காரணமாக நாம் ஏற்கிருேம் என்பது உண்மை தான். இவ்வாறு ஏற்றுக் கொள்ளுதல் என்பது ஒருவகைத் துணிகரமே உண்மை நாட்டத்திற்கு ஆதிக்கம் உறுதுணை செய்யாது.

ஆதிக்கத்தின் அடிப்படையில் அறிவனவற்றை அறிவு, அனுபவம் ஆகியவற்றின் துணைகொண்டு தெளிந்தால்தான் உண்மை இது எனக் கண்டறிய முடியும்; உண்மை அறிவுக்குத் தேவையும் அதுவே.

நவராத்திரி

மயிலைவாணன்

சூரியன் கன்னிராசியில் செல்லும்போது கார் காலம் தொடங்குகிறது. அப்போது தொற்று நோய்கள் தோன்றும். இவற்றைத் தடுக்க உடலை யும் உறைவிடங்களையும் தூய்மையாக வைத்துக் கொண்டு விரதம் இருந்தால் நோய்களைத் தடுப்பதுடன் உடலும் உள்ளமும் இன்ப நிலை யடையும். விரதம், நோன்பு என்பன ஒரு பொருட் சொற்கள். உபவாசம் என்றால் இறைவனுக்கு அருகில் உறைவது. விரதம் என்றால் பட்டினி கிடப்பது. உடல், உயிர் இரண்டுக்கும் நன்மை பயப்பது; ஐம்பொறிகளை அடக்குவதற்கு ஒரு வழியாய் அமைந்தது; ஞானம் கைகூடுவதற்குச் சாதனமாக இருப்பது. கிறித்துவம். சமணம், பௌத்தம், சைவம், வைணவம் முதலிய எல்லா சமயத்திலும் விரதம் உண்டு.

விரதம் இரண்டு வகைப்படும். அவை நித்திய விரதம், நைமித்திக விரதம் என்பன. நித்திய விரதங்களாவன-அருளுடைமை, இன்னாசெய் யாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, வாய்மை, சினமின்மை முதலியன. நைமித்திக விரதங்கள் உபவாச விரதங்களாகும். மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவைவிடுத்தோ அல்லது சுருக்கியோ மனம், வாக்கு, காயம், என்ற மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி வழிபடுதலே சிறந்த விரதம். "கொல்லா விரதம் குவலய மெல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்லுவ தென்னிச்சை பராபரமே" என்றார் தாயுமானப் பெருந்தகையார். 'காப்பது விரதம்' என்பது ஔவைப் பிராட்டியின் வாக்கு.

விரதங்களை வாரம், பட்சம், மாதம், ஆண்டு என்ற வகையில் அனுட்டிப்பது வழக்கம். வார விரதங்கள் ஆடி வெள்ளி, ஆவணி ஞாயிறு, புரட்டாசி சனி, கார்த்திகை திங்கள் முதலியன. பட்ச விரதம் பிரதோஷம். மாத விரதங்கள் அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை, சஷ்டி முதலியவை. ஆண்டு விரதங்கள் நவராத்திரி, சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி முதலியன. விரதங்கள் வழிபடும் கடவுளர்க்கு ஏற்ப அனுட்டிப்பதுண்டு. அவை சிவ விரதம், தேவிவிரதம், விநாயக விரதம், முருக விரதம், பைரவ விரதம், வீரபத்திர விரதம் என்பன.

அவற்றை அனுட்டிக்கும் முறை நாள் முதலியவை உண்டு. ஈண்டு நாம் எடுத்துக் கொள்ளுவது தேவி விரதம் பற்றியது. தேவி விரதம் வெள்ளிக் கிழமை விரதம், ஐப்பசி யுத்தர விரதம், நவராத்திரி விரதம் என மூன்றும். உபதேச காண்டத்தில்,

"சித்திரை பூரணை பக்கம் சுக்கிர வாரம் பயில்வார் தீமை தீர்ந்து
முத்திதரும் ஐப்பசி உத்திரத்தோடு மாநவமி இவைமூன்றும்
தத்தை மொழி உமை விரதம்"

என்று கூறப்பெற்றிருக்கிறது. மாநவமி அல்லது புரட்டாசி நவராத்திரியைப் பற்றி ஈண்டு நாம் சுருக்கமாக உரைப்போம்.

நவராத்திரி இரண்டு வகை. ஒன்று வசந்த ருதுவில் சித்திரை வளர்பிறை பிரதமையில் வருவது. மற்றொன்று, புரட்டாசி வளர்பிறையில் தொடங்கி நவமி வரையில் கொண்டாடப் பெறுவது. சாரதா நவராத்திரி என்ற பெயருமுண்டு விவரங்களை, காரணாகமம் நவராத்திரி விரதப்படலத்தில் காணலாம். சிவபெருமான் அருட்சத்தி உமாதேவி. சக்தி ஒன்றே. ஆனல் தொழிலால் பேதம் பல. நெருப்பின் சக்தி சூடு. தொழிலால் நெருப்பு வறுக்கும், பொரிக்கும், எரிக்கும், பொசுக்கும், அவிக்கும், நீற்றும், உருக்கும் எனப் பலவகை.

சக்தி முத்தொழில்

படைப்பு	: அயன்	சனனி	நாக்கு
காப்பு	: திருமால்	ரோதயித்ரி	மனம்
அழிப்பு	: உருத்திரன்	ஆரணி	காயம்

இவை முற்கால வழிபாட்டு வகை. தற்காலம்

முதல் மூன்று நாட்கள்			— துர்க்கை
அடுத்த	,,	,,	— இலட்சுமி
கடைசி	,,	,,	— சரசுவதி

இப்படி ஒன்பது நாட்கள் (நவராத்திரி) விழாக் கொண்டாடுகின்றனர். மைசூரில் தசரா (பத்து இரவுகள்) என்று கொண்டாடுகின்றனர். மகா நவமியன்று தேவிபூசை, சரசுவதி பூசை, ஆயூத பூசை இம்மூன்றையும் செய்கிறோம். விஜயதசமி யன்று ஆயுதபூசை. அதாவது விஜயன் (அர்ஜுனன்) வன்னிமரத்தில் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை எடுத்தநாள். காரியங்களில் வெற்றிபெற அந்த நாளில் தொடங்குவது வழக்கம். சிறுகுழந்தைகளுக்குக் கல்வி தொடங்குவதும் அந்த நாளில் தான்.

அந்த ஒன்பது நாட்களிலும் கன்னிப் பெண்களுக்கு புத்தாடை, அணிகலன், உணவு முதலியன கொடுத்து தேவியாகப் பாவித்து வழிபட வேண்டும். மூர்த்திகளை விதவிதமாக அலங்காரம் செய்து கோயில்

களிலும், வீடுகளில் கொலு வைத்தும் கொண்டாடுகின்றனர். பெண்கள் பல வீடுகளுக்குச் சென்று பாடி மகிழ்வதுண்டு. தேவி உபாசகர்கள் ஒன்பது நாட்கள் பூசை செய்வதுமுண்டு. தேவியை, காளியாகவும், அம்பிகையாகவும், கலைமகளாகவும் வழிபட்டுப் பேறு பெற்றோர் பலர். காளிதாசரும், குமரகுருபரரும் கலைமகளையே அம்பிகையாகக் கொண்டனர்; கம்பர் காளியையும் கலைமகளையும் வழிபட்டார்; ஒட்டக்கூத்தரும் சரசுவதியை வழிபட்டார்; அபிராமி பட்டர் அபிராமிதேவியை உபாசித்தார்; இராமகிருஷ்ண பரமஹம்சர் காளிதேவிக்கு வழிபாடு செய்தார்; சிவாஜி மன்னர் பவானிதேவியை வழிபட்டு வாள் பெற்றார்; பாரதியார் பராசக்தியைப் பாடிப் பரவியுள்ளார். மதுரையில் கலைமகள் கோயிலில் ஆபுத்திரன் என்பவன் தூங்கியபோது கலைமகள் அவனை எழுப்பி எடுக்க யெடுக்கக் குறையாத அமுதசுரபி என்னும் பாத்திரத்தை அளித்தாள் என்று மணிமேகலை கூறுகிறது. அதைப் பெற்றுக் கொண்ட ஆபுத்திரன்,

“சிந்தாதேவி! செழுங்கலை நியமத்து
நந்தாவிளக்கே! நாமிசைப்பாவாய்!
வானோர்தலைவி! மண்ணோர்முதல்வி!
ஏனோர் உற்ற இடர்களைவாய்”

என்று தொழுதான் என்பர் ஆசிரியர் சாத்தனர்.

உமாதேவி பச்சை நிறம், அது வளமையும் செழுமையும் குறிக்கும். அருளும் அனுக்கிரகமும் செய்யும் தேவி. திருமகள் பொன் அல்லது சிவப்பு நிறம். ‘திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்’ என்பது பேயாழ்வார் திருவாக்கு. செம்மை, அழகு, தியாகம் முதலிய குணங்களைக் குறிக்கும். கலைமகள் வெண்மை நிறம். ‘வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பவள்.” வெண்மை நிறம் தூய்மை, வாய்மை மனத்துக்கண் மாசின்மை, சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் உய்க்கும் அறிவு முதலியவற்றை குறிக்கும்.

ஆகவே, நவராத்திரி ஒன்பது நாட்களிலும் இம்மூன்று தேவிமார்களையும் நாம் வழிபட்டு அவர்கள் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக. அபிராமி அந்தாதியை நாள்தோறும் ஓதுவதும் நலம் தரும். நவராத்திரி வழிபாட்டின் பயனை பேரூர்ப் புராணப் பாடல் கீழ் வருமாறு கூறுகிறது:—

“கன்னிமதியின் வரையுயிர்த்த கன்னிமகிழப் பேரன்பால்
மன்னு நவராத்திரி பூசை மரபினியற்று முறைமையோர்
நன்னருலகம் பணிகேட்ப நவைதீர் செல்வத்திடைமூழ்கி
முன்னுங்கதியினினிதுறீஇ முடிவில் இன்பம் நுகர்வரால்”

புரட்டாசி நவராத்திரியை யொட்டி இக்கட்டுரை வெளிவருகிறது.

சந்தான குரவர் வரலாறு

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,

மெய்கண்டார் வரலாறு (தொடர்ச்சி)

மௌன உபதேச மாண்பு :

சகலாகம பண்டிதர் தம்மை உணர்ந்து கொள்ள இந்த விடையே போதுமானதாக இருந்தது. சொல்லாமற் சொல்லிய பெருமானின் உண்மை நிலையை அந்தக் கணத்திலேயே உணர்ந்து கொண்டார் அவர். தம்மை ஆட்கொள்ள வந்த ஞானத்தின் திருவுருவே மெய் கண்ட சிவனும் என்று உணர்ந்தார் அவர். திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். பிழைபொறுக்க வேண்டும் என்று பணிந்து பரவி நின்றார். இவ்வாறு தம்முடைய மௌன உபதேசத்தாலேயே மனம் பண்பட்டு நின்ற சகலாகம பண்டிதருடைய சிந்தைக் கனிவு முதற் குரவர் நெஞ்சத்தில் கருணையைத் தோற்றுவித்தது. நூலறிவு மிக்க பெரும்புலவராக விளங்கிய பண்டிதர் அநுபவ ஞானமும் அடைந்து சிவஞான நெறியை உலகிற்கு எடுத்து வழங்குதல் வேண்டும் என்று தம் திருவுள்ளம் கொண்டார். அருணந்தியாரைத் தம் மாணவராக ஏற்றுக் கொண்டார். சகலாகம பண்டிதர் தீட்சைத் திருநாமம் ஆக "அருணந்தி" என்று வழங்கப் பெற்று மலர்ந்தார். மெய்கண்டார் தம்முடைய சிவஞானபோதத்தை விளக்கியருளினார்; சிற்றம்பல நாடிகள், மனவாசகம் கடந்தார் முதலிய மாணவர்களோடு அருணந்தி யாரையும் ஏற்றுக் கொண்டார்; அருணந்தியாரும் மாணவருள் முதலாமவராக விளங்கிவரலானார். அருணந்தி சிவனார் முதலாக மெய் கண்டாருடைய மாணவர்கள் நாற்பத்தொன்பதின்மர் என்று கூறுவர்.

சிவபரிபூரணத்திற் செம்மாப்பு :

சிவஞானச் செஞ்ஞாயிருக விளங்கிய மெய்கண்ட சிவனாரின் வாழ்வு தத்துவ ஞான உபதேசங்கள் மலர்ந்து அருள்மணம் பெருக்கிற்று; ஞான உபதேசங்கள் புரிந்து தெளிவு உண்டாகச் செய்தார் இவ்வருளாளர்; சிவாநுபவம் பெற்று இன்புறும்படி அருள்புரிந்தார். இங்ஙனம் ஞான நற்பணியே வடிவாக நின்று, திருக்கயிலாய பரம்பரை ஞானத்தை இந்நிலவுலகின்கண் எடுத்து வழங்கிய இம்முதற்பெருங் குரவர் தமக்கு இட்ட பணிகள் நிறைவுற்ற பின்னர், சிவபரிபூரணத்திற் கலந்தார். இதனை உணர்த்தும் அருந்திருப்பாட்டின் அழகுறு வடிவம் இது :

"சித்தமான அத்துவிதநற் சோகம் பாவனையே
நித்தமும் நினைந்திருத்தலால் நிருமல சீவன்
முத்தராகிப் பேரானந்த மூர்த்தியாய் முடிவில்
சித்தசித்தெலாம் நிறைந்திடு சிவபரன் ஆனார்"

மெய்கண்டார் ஐப்பசித் திங்கள் சோதி நாளில் இறைவன் திருவடி எய்தினர் எனல் மரபு.

3

அருணந்தி சிவாசாரியார் வரலாறு

சகலாகம பண்டிதராக :

சந்தான குரவருள் இரண்டாமவராகிய அருணந்தி சிவாசாரியார் நடுநாட்டில் உள்ள திருத்துறையூரில் பிறந்தவர். இறைவனை முப்போதும் திருமேனி தீண்டி, வழிவழி அடிமை செய்யும் ஆதிசைவ அந்தணர் குலத்தில் பிறந்தார். இவருடைய பெற்ருேர் பெயர்கள் விளங்கவில்லை; இயற் பெயரும் விளங்கவில்லை. வரலாற்றைப் பாடவந்த ஆசிரியரும்,

"வேத ஒலியும் முழவொலியும் வேள்வியியற்றும் திருமறையோர்
நாத ஒலியும் ஓவாத நன்மை பெருகும் திருத்துறையூர்
ஆதிசைவ குலம்புரிந்த அருமையான பெருந்தவத்தால்
நீதிசாலும் சிவாகமங்கள் நிலவ ஒருவர் அவதரித்தார்"

என்றே பாடியுள்ளனர். ஆதிசைவர் குலத்திற்கேற்றபடி வேத ஆகமங்கள் பலவற்றையும் கற்றுத் தேர்ந்தார். காமிகம் முதலான ஆகமங்கள் யாவற்றையும் உணர்ந்தார். சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் ஆகிய சிவாகமத்தின் பிரிவுகள் அனைத்தையும் ஆராய்ந்தறிந்தார். இதனுற் "சகலாகம பண்டிதர்" என்ற பெருஞ் சிறப்புப் பெயர் இவர்க்கு வழங்கி வரலாயிற்று. இயற்பெயர் சிறந்து விளங்கிடாமல், சிறப்புப் பெயரே சிறப்பக் கொண்டார் இவர்.

ஞானத் தொண்டு :

திக்கெலாம் இவருடைய ஆகம அறிவுநூல் நுட்பத்தை வியந்து போற்றிற்று. 'புன்மை நீங்காப் புறச்சமய நெறிகள் போக்கிக் குற்றம் அற்ற நன்மை பெருகும் சைவநெறி நாட்டிடும்' திறம் உடையவராக விளங்கினர் இவர். நடுநாட்டில் வாழ்ந்த வேளாளர்கட்குக் குலகுருவாக இருந்து, அவரவர் தரத்திற்கேற்ப சமயதீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை ஆகியவற்றைச் செய்து வந்தார். அபரஞானம், பரஞானம் ஆகிய இருவகைச் சிவஞானத்தையும் மக்கட்கு இவ்வாறு வழங்கி வந்தார்.

தாம் மாணுக்கர் மனைகட்குச் செல்லுகின்ற போதெல்லாம் சிவாகமச் சுவடிகளை வண்டியில் ஏற்றிச் சென்று அவற்றைப் படித்துணரும்படி செய்து வந்தார். 'ஞானநூல்தனை ஓதல், ஓதுவித்தல்' முதலியனவும் இறைவன்அடி அடைவிக்கும் எழில்ஞானபூசை என்பது இவர் கொள்கையாக இருந்தது. இவ்வகையான ஞானபூசையையும் இயற்றி வரும் திறம் உடையவராக இவர் விளங்கி வருகின்றமையைத் தமிழ் உலகமே கண்டு வியந்தது.

மெய்கண்டாருடைய மாணவராதல் :

திருவருட் குறிப்புத் தலைக்கூட்டத் தம்மிடம் வந்த அச்சுதக் களப்பாளர்க்குத் திருமுறையிற் கயிறுசார்த்திக் கண்டு, "பேயடையா" என்ற திருப்பாட்டினை உணர்த்தி அவரைத் திருவெண்காட்டிற்குச் சென்று வழிபட்டு மகப்பேற்றுநலம் பெற்றின்புறுமாறு ஆற்றுப்

படுத்தினர். அவ்வாறே களப்பாளர் மெய்கண்ட சிவனரைப் பிள்ளையாகப் பெற்று இன்புற வழிவகுத்தவர் இவரே. மெய்கண்டார் தம்மிடம் குலவழக்கப்படி மாணக்கராக வாராமை கண்டு திருவெண்ணெய் நல்லூர் சென்று, மெய்கண்டார் குறிப்பின்படி அவரது ஆணைவழி நின்று உய்ந்தார். "ஆணவ மலத்திற்கு வடிவம் யாது" என்று தம் நூலறிவு துணையாக இவர் எழுப்பிய வினவிற்கு, அருள் ஞானப் பிள்ளையாராகிய மெய்கண்டார் உரையால் விடை அளிக்காமல், சுட்டு விரலாற் சுட்டி மௌனமாக அளித்த விடை இவரை நிலை தடுமாற வைத்து விட்டது. 'அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்துத் தன்னை ஆட்கொள்ள வந்த ஞானசிரியர் மெய்கண்டாரே' என்ற உண்மை ஒளி இவருடைய உள்ளத்தே தோன்றிற்று; உடன் சிவஞானச் செம்மலாருடைய சேவடிகளில் வீழ்ந்து வணங்கி அவருடைய மாணக்கர் ஆகினர்.

அருணூல்கள் அருளுதல்:

அப்போது பெற்ற தீட்சைத் திருநாமமே 'அருணந்தி' என்பதாகும். திருக்கயிலாயபரம்பரை-திருநந்திதேவர்கால்வழி-ஞானநெறி இங்ஙனம் இவர்வழியே நிலைகொள்ளலாயிற்று. சிவஞான போதம் சித்திபெறற் பொருட்டு, இவர் தம் ஆசிரியரிடம் நன்ருகக் கேட்டுணர்ந்து பன்னிரண்டே நூற்பாவில் அமைந்த அவ்வரும்பொருட் பனுவலை விரிந்த நூல் ஆக்கியருளினர்; சிவஞான சித்தியார் என்னும் திருப்பெயருடன், 'சுபக்கம்', 'பரபக்கம்' என்ற இருபெரும் பிரிவுகள் அமைய இவ்வருளாளர் செய்துள்ள நூல் மிக்க பொருட் சிறப்புடன் அமைந்தது. சாத்திர உலகில் இந்நூலின் அருமை பெருமைகள் நன்கு உணரப் பெற்று, விளங்கி வரலாயின.

தம்முடைய ஞான ஆசிரியரை, 'இருபா இருபஃது' என்னும் நூல் பாடித் தொழுதார். இவ்வாறு சித்தாந்த சைவச் செந்நெறியை உலகில் விளக்கம் செய்து ஞானத் தொண்டு புரிந்து, இறைநிறைவிற் கலந்தருளினர்.

இறையடிப் பேறு:

இவருடைய வாழ்வில் நிகழ்ந்த வேறு நிகழ்ச்சிகளைப் பற்றி ஒன்றும் அறிதற்கியலவில்லை. இவர் இறையடி சேர்ந்தது, புரட்டாசிப்பூரம் என்றுரைப்பது மரபு. இவருடைய இறையடிப் பேறுபற்றி, வரலாறு வகுத்த கவிஞர் அழகுற இசைக்கும் அரும் பொருட் பாட்டு இது.

"சுத்தாத்துவித நிலை யுணர்த்திச்
சொல்லற்கரிய சிவஞான
சித்தியாரும் நல்லிருபா
இருபஃதினையும் செய்தருளிப்
பத்தராவார் பலர் பணியப்
பரசிவோகம் பாவனையால்
நித்த அகண்ட பூரணமாம்
நிலைமை எய்தி நின்றனரால்".

4

மறைஞானசம்பந்தர் வரலாறு

பிறந்தஊர்-குறிப்புக்கள் :

மெய்கண்டாரை உலகிற்கு வழங்கிய பெண்ணுகடம் என்ற நடு நாட்டுப் பதியிலேயே மறைஞான சம்பந்தரும் தோன்றினர். சந்தான குரவருள் மூன்ருவராகிய இவருடைய வரலாறு குறித்தும் பெருவிளக்கங் கள் கிடைக்கப் பெறவில்லை. பெண்ணுகடத்தில் தோன்றி, மருதூர் என்ற ஊரில் இவர் வளர்ந்தவர் என்பது, "கடந்தைச் சம்பந்தர்", "மருதைச் சம்பந்தார்" என இவரைக் கூறுவதானல் விளங்குகின்றது. இவரும் மறையவர் குலத்திலே தோன்றியவரே. இவருடைய இயற் பெயரும் பெற்ருேர் பெயர்களும் இனிது புலப்படவில்லை; வரலாற்ருசிரியரும்,

"தூயமறைக் குலம் விளங்கச்
சொற்கலைகள் தெளிவெய்த
மேயசிவ னடியார்கள்
மேல்வினையின் துகளற்ற
மாயஅயற் சமயங்கள்
மறையவர்தங் குலத்தொருவர்
தீயனஎலாம் ஆழத்
திருவவதாரம் செய்தார்"

என்றே பாடியுள்ளார். அந்தணர் மரபுப்படி, ஏழாண்டில் முந்நூல் அணிந்து, மறை, ஆகமம், பதினெண் புராணங்கள் பயின்ருர். ஆறு சாத்திரங்கள் கற்றுத் திகழ்ந்தார். இக்கல்விச் சிறப்பால் அக்காலத் தமிழ் உலகம், "மறைஞான சம்பந்தர்" என்ற சிறப்புப் பெயரால் இவரை வழங்கி மகிழலாயிற்று. சகலாகம பண்டிதராகத் திகழ்ந்த அருணந்தி சிவாசாரியரை அடைந்து மாணுக்கர் ஆயினர். அவ்வருளா ளரது அருளால், தீட்சை முதலியன ஏற்றுச் சிவஞானம் பெற்றுத் திகழ்ந்தார்.

தில்லை வாழ்வு :

தம் குருநாதரிடம் விடைபெற்றுத் தில்லைக்குச் சென்ருர் மறைஞான சம்பந்தர். அங்கு, உலகம் உய்ய ஆடும்பெருமான் அடியிணையைப் போற்றிப்பரவினர். தில்லை நகரில் வாழ்ந்து, கூத்தப் பெருமான் பாதங்களைக் கும்பிட்டுப் பேரின்பம் பெருகி நின்ருர் இவ்வருளாளர். திருவைந்தெழுத்துத் தியானம் புரிந்து இன்புற்றிருந்தார். ஆனந்தக் கூத்தனை வழிபட்டு அந்தப் பேரின்ப வெள்ளத்தே திளைத்து நின்ருர். தம்மிடம் வந்த மாணுக்கர்களுக்குச் சிவஞான உபதேசம் செய்வதிலேயே இவருடைய வாழ்வு நிறைவு பெற்று மலர்ந்தது. தில்லைக்கு அருகில் உள்ள திருக்களாஞ்சேரியில் சென்று தங்கினர். அங்கு இவர் வாழ்ந்த திருமடம் தவச்சாலையாக விளங்கியது.

(தொடரும்)

திருமாலடியார்

இராமானுசர்

வித்துவான் திரு. கா. அ. மணவாளன், பி.ஏ., பி.ஓ.எல்.,

(2)

இராமானுசரையும் மற்ற சீடர்களையும் அழைத்துக் கொண்டு யாதவப்பிரகாசர் காசியாத்ரைக்கு நல்ல நாளில் புறப்பட்டார். பயண காலத்தில் இராமானுசரும் கோவிந்தரும் சந்தித்துப் பேசிக்கொள்ளாத படி மற்ற சீடர்கள் கண்காணித்து வந்தனர். மேலும் இராமானுசரிடம் அதிக பாசமுள்ளவர்கள் போலவும் நடந்து கொண்டனர். இவ்விதம் பல காவதம் கடந்து சில நாட்களில் விந்தியமலைச் சாரலை அடைந்தனர். இராமானுசர் மிகவும் பசுமையும், கருமையும் கலந்து கண்ணுக்கு நல்விருந்தாய்க் காட்சியளிக்கும் மலைக் காட்சிகளைத் திருமாலின் திருவுருவமாக எண்ணி மகிழ்ந்தார். ஆனால் இராமானுசருக்கு எந்த நேரத்தில் என்ன தீங்கு வருமோ என்று மிக்க கவலை கொண்ட கோவிந்தபட்டர் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்காமல் இராமானுசரைக் காப்பதிலேயே கருத்தூன்றியிருந்தார். எப்படியும் இராமானுசரைத் தனிமையில் சந்திக்க வேண்டுமென்று திட்டமிட்டார்.

இப்படியிருக்கையில் ஒருநாள் பொழுது விடியு முன்பே இராமானுசர், அண்மையிலிருந்த பொய்கைக்கு நீராடப் புறப்பட்டார். இதையறிந்த கோவிந்தபட்டரும் மற்றவர்களுக்குத் தெரியாமல் இராமானுசரைப் பின் தொடர்ந்தார். அப்பொய்கை புதர்களால் நாற்புறமும் மூடப்பட்டிருந்தது. அதுதான் நல்ல நேரம் என்று கோவிந்தர் இராமானுசரைத் தண்டனிட்டு யாதவப் பிரகாசருடைய சூழ்ச்சியினைத் தெரிவித்தார். எப்பொழுது என்ன விளையுமோ? தெரியாது. இப்பொழுதே தாங்கள் தப்பி விடுவது தான் சிறந்தது என்று காதோடு கூறிவிட்டார். மற்றவர் நம்மைத் தேடி வருவதற்குள் நாம் பிரிந்து விடவேண்டும் என்று சொல்லி விட்டு விரைவாகச் சீடர்கள் இருக்குமிடத்திற்கு கோவிந்தர் வந்துவிட்டார். கோவிந்தரால் உண்மையை அறிந்து இராமானுசர், எல்லாம் இறைவன் திருவுள்ளம் என்று ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்டு பொழுது விடியுமுன்பே அந்த இடத்தை விட்டு அகன்றார்.

பொழுது புலர்ந்தது. இராமானுசரைக் காணாமல் யாவரும் திகைத்தனர். காட்டின் பல பாகங்களுக்கும் சீடர்கள் சென்று தேடலாயினர். கோவிந்தரோ துன்பமே வடிவெடுத்தாற்போல ஒன்றும் பேசாமல்

ஒருமரத்தடியில் அமர்ந்தார். எங்கும் தேடிக் காணுமையால் காட்டு விலங்குகளுக்கு இராமாநுசர் இரையாகியிருக்க வேண்டும் என்று ஒருவாறு முடிவு செய்தனர். வாய்விட்டுப் புலம்பும் கோவிந்தரை எல்லோரும் தேற்றினர். யாதவப்பிரகாசர் கோவிந்தரை அழைத்து வேதாந்திகளாகிய நாம் உலகியல்களுக்கு மனத்தைத் தளரவிடக் கூடாது. ஆதலால் நீ அழாமல் எங்களுடனே காசியாத்திரைக்கு வா என்று தன்னுடைய வேதாந்த வாதங்களாலே சமாதானப் படுத்தி உடன் அழைத்துச் சென்ருர். உண்மையில் இராமாநுசர் எப்படியோ முடிந்து போய் விட்டார் என்ற மகிழ்ச்சியிலேயே யாதவப்பிரகாசர் யாத்திரையைத் தொடங்கினுர்.

இங்கு இப்படியிருக்க நம் இராமாநுசர் பொழுது புலராத அந்த இருட்டு வேளையில் ஓர் ஒற்றையடிப் பாதையைப் பின்பற்றி அவ்வழியே நடக்காலானுர். இறைவன் காட்டிய வழியாகவே அவ்வழியை யெண்ணிச் சென்று கொண்டிருந்தார் இராமாநுசர். மனித நடமாட்டமே யில்லாத அந்தக் காட்டுவழியில் பல ஒற்றையடிப் பாதைகள் கண்ணில் பட்டன. அவற்றுள் காஞ்சிக்குச் செல்லும் வழி யாது என அறியமாட்டாமல் மனம் தடுமாறினுர். கல்லும் முள்ளும் நிறைந்த அக்காட்டு வழியில் ஒரு வழியைப் பின் பற்றி மிக்க துன்பத்துடன் சென்று கொண்டிருந்தார். முடிவில் வழி நடந்த களைப்பால் ஒரு மரத்தடியை நாடிச் சிறிது படுத்துக் கொண்டார். பசியும் களைப்பும் அதிக மாகி அங்கேயே மூர்ச்சித்துவிட்டார். சிறிது நேரம் கழிந்தவுடன் இராமாநுசர் மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்கார்ந்தார். கண்விழித்துப் பார்த்த பொழுது அருகே ஒரு வேடன் வில்லும் அம்புமாய்த் தம்மை நோக்கி வருவதைக் கண்டார். அவ்வேடனுடன் அவன் மனைவியும் வந்து கொண்டிருந்தாள். இருவரும் இராமாநுசருடைய அருகில் வந்து நின்றனர். அவர்களைக் கண்டவுடனே இராமாநுசருக்குக் கொஞ்சம் சக்தி வந்தது. அவர்களை நோக்கி "நீங்கள் யாரோ ?" என்று கேட்டார். அதற்கு அவ்வேட்டுவர் "நாங்கள் விந்திய மலைச் சாரலில் வாழ்பவர்கள். இராமேச்சுவரம் செல்கிருேம் என்றனர். அவ்வுரையைக் கேட்ட இராமாநுசர் நானும் காஞ்சிபுரம் செல்ல வேண்டும். வழி தெரியாமல் இந்தக் காட்டில் வருந்துகிறேன். உங்களுடன் வரலாமா என்று வினவினுர். அதற்கு அவ்வேட்டுவத் தம்பதிகள், மிகவுமகிழ்ந்து நாங்களும் காஞ்சிபுரம் வழியாகத்தான் போகிருேம். நீங்களும் அஞ்சாமல் எங்களுடன் புறப்பட்டு வாருங்கள் என்று அழைத்தனர்.

வேட்டுவத் தம்பதிகள் முன்னே செல்ல இராமாநுசர் அவர்களைப் பின் தொடர்ந்தார். சிறிது தூரம் சென்றவுடன் அவர்கள் ஒரு பொய்கையைக் கண்டனர். உடனே வேடனின் உதவியால் இராமாநுசர். பொய்கையில் இறங்கி வேண்டிய மட்டும் நீரருந்தினுர் அருகிலிருந்த தாழ்ந்த மரங்களிலிருந்து காய் கனிகளைப் பறித்துப் புசித்தார்.

அப்பொழுது வேடன் இராமாநுசரை நோக்கி "பொழுது சாயுமுன்பே இந்தப் பெரிய காட்டின் நடுவிடத்தைக் கடந்தாக வேண்டும். கொடிய விலங்குகள் வாழும் இந்த இடத்தில் இரவு தங்குவதும் ஆபத்து" என்று கூறினன். உடனே இராமாநுசரும் மிகவும் வேகமாக அவர்களோடு நடக்கலானர். இவ்விதம் பகற்பொழுது முழுவதும் நடந்து இரவு வருவதற்குள் மூவரும் வெகுதூரம் வந்து விட்டனர். பின்பு இரவு வந்து விடவே மேலும் நடந்து செல்வது ஆபத்து என்று உணர்ந்த அவர்கள், ஒரு பெரிய மரத்தடியில் படுத்துறங்கிக் காலையில் பயணத்தை மேற் கொள்ளலாம் என்று முடிவு செய்தனர். கரடு முருடான அந்த இடத்தில் உண்ண உணவும், படுக்கப் பாயுமின்றி மிகவும் களைப்போடு அவர்கள் படுத்துக் கொண்டனர். கரியஇருள் சூழ்ந்த அந்தக்காட்டில் நடுஇரவில் அவ்வேடனின் மனைவி நீர்வேட்கையால் தண்ணீர் வேண்டுமென்று கேட்டாள். அதைக்கேட்ட வேடன் இப்பொழுது நள்ளிரவாக உள்ளது. இங்கு அண்மையில் ஒரு கிணறு இருக்கிறது. என்றாலும் இந்த இருட்டில் அங்கு போக முடியாது. வழியும் தெரியவில்லை. ஆதலால் பொழுதுவிடிந்தவுடனே உனக்கு வேண்டுமட்டும் தண்ணீர் தருகிறேன் என்று ஆறுதல் கூறினன். இவர்களுடைய உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த இராமாநுசருடைய உள்ளம் மிகவும் வருந்தியது. நமக்குத் தக்க நேரத்தில் உதவி செய்த இவர்களுக்கு, நம்மால் இப் பொழுது உதவி செய்ய முடியவில்லையே என்று வருந்தினர். வேடச்சி யின் தாகத்தைத் தீர்க்க வேண்டுமென்று துடியாய்த் துடித்தார். ஆனல் இடமோ புதிது. இருளோ காரிருள். என் செய்வார் இராமாநுசர். பொழுது புலர்வதற்கு முன்பே எழுந்துவிட்டார். கிணறு உள்ள இடத்தைக் கண்டு பிடித்துவிட்டார். வேடச்சியின் தாகத்தைத் தீர்த்து வைக்க விரும்பினர். ஆனல் அவர் எங்கு தேடிப் பார்த்தும் அவ்வேடர் தம்பதிகளைக் காண முடியவில்லை. அவர்கள் எங்கே போனர்கள்? ஐயோ! என்னைக் காப்பாற்றிய தாய் தந்தை போன்றவர்களான அவர்கள் எப்படித் திடீரென்று மாயமாய் மறைந்து விட்டார்கள் என்று புலம்பிய வாறே வழிநடக்கலானர். அப்படி நடந்து வந்து கொண்டிருக் கும் பொழுது வழியில் வயலுக்கு நீர்ப்பாய்ச்சிக் கொண்டிருக்கும் ஒரு வேளாளனைக் கண்டார். அவ்வேளாளனை நோக்கி இந்த வழியாகக் கணவனும் மனைவியுமாக யாரேனும் வந்தார்களா என்று கேட்டார். அதற்கு அவன் தான் யாரையும் காணவில்லையென்று கூறிவிட்டான். உடனே இராமாநுசர் வெகுதொலைவில் கண்ணிற்குப் புலப்படும் கோபுரத்தைக் கண்டு அது என்ன ஊர் என்று கேட்டார். அதற்கு அவன் அந்தக் கோபுரம் காஞ்சி வரதராசப் பெருமாள் கோபுரம். அந்த ஊர்தான் காஞ்சிபுரம் என்று கூறினன். உடனே இராமாநுசர் பெரு மகிழ்வெய்தி நான் மீண்டும் காஞ்சிக்கு வந்து விட்டேனு என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டார். தன்னைக் காஞ்சிபுரத்திற்கு அருகே அழைத்து வந்து விட்ட அந்த வேடர் தம்பதிகள் வேறு யாராக இருக்க முடியும்? என்று சிந்தித்துப் பார்த்தார். பேரருளாளனும், பெருந் தேவித்தாயாரும் தான் வேடர் கோலத்திலே வந்து நம்மை

ஆட்கொண்டார்கள் என்று உறுதியாக நம்பினுர். உடனே காஞ்சி புரத்திற்குச் சென்று கோயிலிலுள்ள பொய்கையில் நீராடிப் பேரருளாள ரான வரதராசப் பெருமாளேயும், பெருந்தேவித்தாயாரையும் தரிசனம் செய்துவிட்டுப் பின்பு தம்முடைய வீட்டுக்கு வந்தார்.

எதிர்பாராமல் இராமாநுசர் வந்ததைக் கண்ட தாயாகிய காந்தியம்மை உள்ளம் பூரித்தாள். வாரி அணேத்தாள். ஆயினும் தனியனுக வந்துள்ளாயே! தம்பியாகிய கோவிந்தன் எங்கே? என்று கேட்டாள். கங்கையாடி இதற்குள் எப்படிவர முடிந்தது? என்றெல்லாம் கேள்விகளுக்கு மேல் கேள்விகளாகக் கேட்டாள்.

இராமாநுசர் சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டுப் பின்பு, செய்திகளேயெல்லாம் ஒன்று விடாமல் தாயிடம் எடுத்துக் கூறினுர். யாதவப்பிரகாசரின் சதித்திட்டத்தை அறிந்த தாயின் உள்ளம் பதைபதைத்தது. கண்கள் குளமாகி விட்டன. எப்படியோ நம்மிராமா நுசன் நம்மிடம் வந்து விட்டானே என்று மகிழ்ந்து அதற்குக் காரண மான பேரருளாளனுடைய பெருங்கருணேயைப் போற்றிப் புகழ்ந்தாள். வழி நடந்த களேப்பாலும், பசியாலும் இளேத்திருக்கும் இராமாநுசருக்கு நல்லுணவு படைக்க முற்பட்டாள். இராமாநுசருடைய உள்ளமோ தமக்குக் காட்டில் வழிகாட்டிய வேடர் தம்பதிகளிடமே இருந்தது. காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டுள்ள பேரருளாளரும், பெருந்தேவியுமே நம்மை அவ்வடிவில் வந்து காப்பாற்றியுள்ளார்கள் என்பதையறிந்து உள்ளம் நெகிழ்ந்தார். தண்ணீர்கேட்டு, அது பெருமல் நம்முடனே தங்கியிருந்த அத்தாயினுக்கு, நாம் இப்பொழுது வேண்டுமளவு தண்ணீர் அளிக்க வேண்டுமென்று திருவுள்ளம் கொண்டார். காஞ்சி புரத்திலிருந்து சுமார் 3 கல் தொலேவிலிருக்கும் பாலாற்றங்கரையிலுள்ள சாலேக்கிணற்றிலிருந்து பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்யவும் திருவிடாய் தீர்க்கவும் தினமும் தாமே குடம் குடமாய்த் தண்ணீரைச் சுமந்து வந்து கோயிலில் பூசைக்குக் கொடுத்தார். இச்செயலால் இன்றும் பெரும்பூதூர் மாமுனிவனுகிய இராமாநுசர் “பெருந்தேவி யாருடைய பெருந்தாகம் தீர்த்துகந்த தேவனுக” போற்றப்படுகின்ருர்.

இந்நிலேயில் இராமாநுசருடைய சிற்றன்னேயும், கோவிந்தருடைய தாயாருமான பெரியபிராட்டியார் மழலே மங்கலத்திலிருந்து இராமா நுசருடைய மனேவியை அழைத்துக் கொண்டு காஞ்சிபுரத்திற்கு வந்து விட்டார். இராமாநுசரும் சிற்றன்னேயை வணங்கினுர். வணங்கிய இராமாநுசரை எடுத்து ஆசி கூறி ‘எப்படி இவ்வளவு விரைவில் காசி யாத்திரையை முடித்து வரமுடிந்தது’ என்று வியப்போடு கேட்டாள். கோவிந்தன் எங்கே? என்றும் வினவினுள். இராமாநுசர் எல்லா நிகழ்ச்சிகளேயும் ஒன்று விடாமல் கூறினுர். கோவிந்தனுக்கு ஒரு குறைவும் வராது என்றும் ஆறுதல் கூறினுர்.

(தொடரும்)

உ

சிவமயம்

வாழ்வு

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

வாழ்தல், வாழ்வு, வாழ்ச்சி, வாழ்க்கை முதலாய பல சொற்கள் உள. எல்லாம் ஒரே கருத்தன அல்ல. தூங்கல், தூக்கம் என்பனவும், கிடத்தல், கிடப்பு, கிடக்கை முதலியனவும் அன்னவையே. 'மன் இங்கு வாழ்வு தருதும் அவற்றுனும் வாழ்மின்' (சிந்தாமணி 2347) என்புழி 'வாழ்வு' என்பது (ஜீவிதம்-) உயிர் பிழைத்துக் கொண்டிருக்கும் நன்மை என்ற பொருளில் உளது. "இல்வாழ்க்கை—இல்லாளொடு கூடி வாழ்தலினது சிறப்பு" (திருக்குறள் அதிகாரம். 5. பரிமேலழகருரை) 'அன்பகத்தில்லா வுயிர் வாழ்க்கை என்புழி வாழ்தல் என்னும் பொருட்டு. வகை மாண்ட வாழ்க்கை-உறுப்பழகு பெற்ற அரசாட்சி, (897) 'ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தல்' (967) என்புழித் தொழிலை உணர்த்திற்று, 'ஈதல் இசைபட வாழ்தல்' என்புழி வியங்கோளாயிற்று, வாழும் உயிர்-மக்களுயிருள்ளும் உணர்வு மிகுதியுடையவுயிர் (392). இவற்ருல் வாழ்வு என்பது இன்னது எனல் விளங்கும்.

வாழ்வு உடலில் வாழ்வு, உடலொடு கூடியிருந்து உலகில் வாழ்வு, அவ்விரணடினும் நீங்கி அருளைக் கூடி அருள் வெளியில் வாழ்வு, அதனெடு கூடியிருந்தும் அவ்வருளை மறந்து, இன்பத்தையுற்று இன்பமே யாகி, இன்பவெளியாகி அதனையும் எய்தினேன் என்று தன்னறிவு தோன்றல் அறத் தன்னை மறந்து, இன்பமட்டுமாக எங்கும் ஒழிவற நிறைந்து அசைவற நிற்கும் தலையாய வாழ்வு மெய்வாழ்வு, அழியாத பெருவாழ்வு, அதுவே எல்லாவுயிர்க்கும் வாழ்முதலாகும்.

வாழ்வு உலகவாழ்வு, உயிர்வாழ்வு, கடவுள் வாழ்வு என்று மூவேருயுண்டு, பாசத்தொடும் உயிர் வாழ்வது துன்பந்தருவது. அது தான் உலகவாழ்வு எனப்படுகின்றது. பாசத்திற்கு வாழ்ச்சி ஏது? மரஞ்செடி, கொடி, புல், பூண்டு, புள், விலங்கு முதலியனவும் வாழ்வுறுகின்றன. மக்கள் வாழ்வை நோக்கி, அவற்றின் வாழ்வை ஆராய்ந்தால் வேறுபாடு பெரிதாத் தோன்றும். உண்மையில் துன்பக் கலப்பில்லாத வாழ்வு இல்லை என்பது தெளிவுறும், கடவுள் வாழ்வு என்று ஒன்று உண்டோ? இக் கேள்விக்கு விடை 'கடவுள் வாழ்த்து' என்ற பெயரேயாகும். 'கடவுள் வாழ்த்து' என்னும் பெயர் தொல்காப்பியத்தினின்று பின்னரும் தொடர்கின்றது. அந்நூற்கு முன்னரும் பல்லாயிரம் ஆண்டாக உள்ளது அது.

சமயநூல்களிற் கடவுள் வாழ்த்து ஒன்றே உண்டு. வெவ்வேறு திறத்தில் அவ்வாழ்த்து அமைந்துளது. அக் கடவுள் வாழ்த்தால் அக் கடவுள் வாழ்தலில்லை, வீழ்தலும் இல்லை. கடவுளை வாழ்த்தும் அவை எல்லாம், வாழ்த்துகின்ற உயிர்கள் தம்வாழ்வைக் குறித்து நிகழ்த்துவனவே. வாழ்வும் வீழ்வும் இல்லாத கடவுளை அவ்விரண்டும் அடையும் உயிர்கள் அக்கடவுளை வாழ்த்திவரின், வாழ்வேயுறும். வீழ்வையுரு. பாசப் பொருள்களொடுகூடிப் பாசவாழ்வும் பதியொ(-கடவுளொ)டு கூடிப்பதி வாழ்வும் அடைவதே உயிர் வாழ்வு. தனியே உயிர்வாழ்தல் என்றும் இல்லை. பாசவாழ்வு துன்பந்தருவது. பதிவாழ்வு

இன்பமே விளைப்பது. அதனை 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என்னும் தமிழ் மறையா லறிக. இன்பமேயுள்ள வாழ்வினும் உயிர்க்கு வேறு ஊதியம் உண்டோ? அவ்வூதியமும் முதல் இல்லார்க்கு இல்லை, பாசம் ஒருவி ஒழிதலே பசுக்களுக்கு ஊதியம். 'பேதையார் கேண்மை ஒரீஇவிடல் ஊதியம்' என்றார் திருவள்ளுவர். பெரியோர் துணைமையே சார்பு. அச்சார்பில்லையேல், யார்க்கும் நன்னிலை இல்லை. பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைதல் முத்தி, பேதையார் கேண்மை ஒரீஇவிடல் போலப் பாசத்தைவிடல், பெரியோர் கேண்மை யுறுவது போலப் பதியடைவு. இதுவே தலையாய ஊதியம். முதல் இல்லையேல் ஊதியம் இல்லை. சிவம் ஆகிய முதல் உடையார்க்கே என்றும் இடையறவுபடாத ஊதியம் உண்டாகும் அவ்வூதியம் அடையாது உலகக் கட்டுற்றுத் துன்பமே யுறுதல் பேதைமை ஆகும். ஆகவே பேதையர், அறிவர் அருளிய நூல்களை ஓதி உணர்ந்து ஒழுகிப் பேதைமை தீரக் கடவர், அக்கடன்மையை நன்குணர்ந்தவர் தம் வாழ்முதலை உணர்ந்து வாழ்வை நாடிப் பெற்று அழியாத இன்பவாழ்வைப் பெறுவர். உயிர் வாழ்விற்கு முதல் சிவம் ஒன்றே. அச்சிவம் ஆகிய முதற்பொருளைப் பெறுது அருள்வாணிகம் நடாத்தி ஊதியம் (வீடு) பெறல் இயலாது.

"பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச் சுருக்கும் அன்பின் வெற்றடியேனை விடுதிகண்டாய் விடிலோ கெடுவேன், மற்று அடியேனைத் தாங்குநர் இல்லை. என்வாழ் முதலே உற்று அடியேன் மிகத்தேறி நின்றேன். எனக்கு உள்ளவனே," (நீத்தல் விண்ணப்பம். 23) தாங்குநர் இன்றியும் தேறுதல் இன்றியும் வெற்றடிமையாய் விட்டாற் கெட்டொழியும் நிலையில் வாழ்முதல் கிடைத்துத் தாங்குதலும் தேறுதலும் கெடாமையும் விடாமையும் எய்திய உண்மையை உணர்க.

"தனித்துணை நீநிற்க யான் தருக்கித் தலையால் நடந்த
வினைத்துணையேனை விடுதிகண்டாய் வினையேனுடைய
மனத்துணையே, என்றன்வாழ் முதலே, எனக்கு எய்ப்பில்வைப்பே
தினைத்துணையேனும் பொறேன் துயராக்கையின் திண்வலையே,"
(39)

இதிலேயும் அம்முதல் வைப்பாகக் காப்பில் வைத்துப் போற்றப் படுகின்றது. 'எய்ப்பில் வைப்பு,' (Savings Bank) என்றதும் உணர்க. 'கயிலாயமென்னும் மலைத்தலைவா, மலையாள் மணவாள, என்வாழ் முதலே' என்று அடுத்தும்

'போற்றி என்வாழ்முதலாகிய பொருளே' என்று திருப்பள்ளியெழுச்சி யின்றொடக்கத்தும் அழைத்தவாறும் காண்க. இங்கே வாழ்முதலாகிய பொருளே என்றதால், வேறுபொருளை உயிர் நாடுமேல், ஏதங்கொண்டு ஊதியம் போகவிடும் பேதைமையே ஆகும்.

வாழ்வுவேண்டின், கடவுளை வாழ்த்த மறத்தலாகாது, வானவரும் தாம்வாழும் பொருட்டே கடவுளை வாழ்த்துகின்றனர். தம்மைப் பிறர் தாழ்ந்து வணங்கி வழிபடும் பொருட்டே அப்பொருளைத் தம்தாழ்த்திய தலையால் வணங்கி வழிபடுகின்றனர். அப்பொருளின் தாளை வணங்காத் தலை குணமுடையதாமோ? வாழ்வு குறித்து வணங்குதலினும் பிறப்பறுத் தல் குறித்து அம்முதற்பொருளை வாழ்த்தி வழிபடுநலம் சிலர்க்குண்டு. அது பலர்க்கு இயலாது. பிறவியைப் பெருங்கடலா நோக்கி, அதை நீந்தும் பெரியோர்க்கே இயல்வது அது. மாணிக்கவாசகர் 'பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே' என்று அருளினர். 'யானும்' என்றதன் உட்கோள் என்ன? வானோர்க்குயர்ந்த உலகம் பெறுவார் செயல் அது. வானோர் செயல் முற் கூறப்பட்டது.

வாழ்த்துக்கள் பற்பலவாய் இருக்கும். சிவனடி வாழ்த்தே வாழ்த் தரகும். சிவனடிவாழ்த்தே வாழ்த்து, மற்றெல்லாம் வாழ்த்தாகா, திருநின்றியூரிலே வழிபட்ட நாளில் நம்மை ஆளுடைய பிள்ளையார் அருளியது இது :—

“நெறியில் வருபேராவகை நினையா நினைவொன்றை
அறிவில்—ஆதருரை கேட்டும் அயராதே
நெறியில்லவர் குறிகள் நினையாதே நின்றியூரில்
மறியேந்திய கையானடி வாழ்த்தும்மது வாழத்தே.”

அத்திருப்பதிகத்திலே, “உறையும் இறையல்லது என் உள்ளம் உணராதே” நின்றியூரன்கழல் அல்லாது எனதுள்ளம் உணராதே, ‘எம் செல்வரடி அல்லாது எனசிந்தை உணராதே” என்ற திருவடிகளை வணங்கி வழிபட்டார்க்கு, மறியேந்தியகையானடி வாழ்த்துமதே வாழ்த்து என்ற உண்மைப் பொருள் உணர்ச்சியில் வாராதிராது, நன்று ஆர்தருபுகலித் தமிழ்ஞானம் மிகுபந்தன் குன்ருத் தமிழ் சொல்லக் குறை வின்றி நிறைபுகழே.” என்ற வாய்மையை உணர்ந்து அத் திருப்பதி கத்தை நாடோறும் ஓதுவார்க்கு மெய் அநுபவமாகும்.

இக்காழிவேந்தர் திருவாய் மலர்ந்த இவ்வாய்மையை அநுபவத்தில் உணர்ந்த மெய்யடியார் அளவிலர். அவருள் ஒருவர் சோமாசி மாற நாயனுர். அவர் சேக்கிழார் நாயனுர்க்குத் தம் அநுபவத்தைச் சொல்லி யருளினுர். இதை நமக்கு அவ் வருண்மொழித் தேவநாயனுர் அருளினுர்,

“யாழின் மொழியாள் தனிப்பாகரைப் போற்றும் யாகம்
ஊழின் முறைமை வழுவாதுல கங்க ளான
ஏழும் உவப்பப் புரிந்தின்புறச் செய்த பேற்ருல்
வாழுந்திறம் ஈசர் மலர்க்கழல் வாழ்த்தல் என்பார்.”

நாள்தோறும ‘வாழ்க அந்தணர்’ எனமுதலும் திருப்பாசுரத்தையும், கந்தபுராணம் முதலியவற்றுள் உள்ள வாழ்த்துப் பாக்களையும் ஒவ்வொரு சைவர் வீட்டிலும் அதில் உள்ளார் பலரும் ஒருங்கு அமர்ந்து பாடி வாழ்த்துவராயின், அவர் வாழ்வு நல்வாழ்வும், பெருவாழ்வும், ஒளிவாழ்வும், அருள்வாழ்வும், மெய்ப் பொருள்வாழ்வும் ஆதல் முக்காலும் உண்மை.

மதுரையில் இவ்வாழ்வுதான் புத்துயிர் பெற்றுப் புவநமெல்லாம் பரவி, இன்றும் நிகழ்கின்றது.

“மீனவற் குயிரை நல்கி மெய்ந்நெறி காட்டி மிக்க
ஊனமாஞ்......நீக்கி உலகெலாம் உய்யக் கொண்ட
ஞானசம் பந்தர் வாய்மை ஞாலத்திற் பெருகி ஓங்கத்
தேனலர் கொன்றை யார்தந் திருநெறி நடந்த தன்றே,”
(860)

“மறையவர் வேள்வி செய்ய வானவர் மாரி நல்க
இறைவன்நன் னெறியின் ஓங்க இகத்தினில் அவனி யின்பம்
குறைவில தெனினும் கூற்றை யுதைத்தவர் நாமம் கூறி
நிறைகடற் பிறவித் துன்பம் நீங்கிடப் பெற்ற தன்றே.”

இது ‘வாழ்க அந்தணர்’ என்ற திருப்பாட்டின் பொருளுணர்ந்துவதறிக.

உ



பொல்லாப் பிள்ளையார்

—((×))—

சிதம்பரத்திற்கு அருகில் திருநாரையூர் என்ற ஊர் உளது. அங்குக் கோயில் கொண்டிருக்கும் விநாயகருக்குப் பொல்லாப்பிள்ளையார் என்பது திருநாமம். இப்பெயர் எவ்வாறு உண்டாயிற்று என்பது அறிதற்கில்லை. பொள்ளா, உளியினால் துவாரமிடப்படாத, சுயம்புவான என்ற சொல் பொல்லா என மருவிற்றென்பர் சிலர். ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு திருநாறையூரில் நம்பியாண்டார் நம்பி (த.க.) ஆதிசைவர் குலத்தில் தோன்றினார். 9-ஆம் நூற்றாண்டு முதற் பராந்தக சோழன் ஆட்சியின் முற்பகுதி என்று திரு. சதாசிவ பண்டாரத்தாரும், ஔவை துரைசாமிப் பிள்ளையும், 10-ஆம் நூற்றாண்டின் இறுதியான முதலாம் இராசராசன் காலம் என்று திரு. நீலகண்ட சாஸ்திரியாரும், டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்களும் நம்பியின், காலத்தைக் கணிப்பர். நம்பியாண்டார் நம்பி பொல்லாப்பிள்ளையார் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார் என்றும், அப்பிள்ளையாருக்கும் நம்பியின்பால் மிகுந்த அருள் இருந்ததென்றும் கூறுவர். நம்யாண்டார் நம்பி அப்பெருமான் மீது இயற்றிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலை என்ற இருபது செய்யுட்கள் கொண்ட ஒரு பிரபந்தமும் பதினோராம் திருமுறையில் சேர்க்கப் பட்டுள்ளது. இவ்விநாயகர் உதவியைக் கொண்டே நம்பியாண்டார் சைவத் திருத்தொண்டர்களின் வரலாறுகளை அறிந்தனர். பலகாலங்களாகச் சிதம்பரத்தில் ஓரிடத்தில் புதையுண்டு மறைந்து கிடந்த தேவாரத் திருப்பதிகங்களையும் அக்காலத்துச் சோழமன்னனின் வேண்டுகோளின்படி இவர் வெளிப்படுத்தி எடுத்து அவற்றைத் திருமுறைகளாக வகுத்துங் கொடுத்தனர். இவ்வரலாற்றை 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவாசாரியார் இயற்றிய திருமுறைகண்ட புராணம் கூறுகின்றது.

—ரா. விசுவநாதன்

சிவனடியார் வரலாறு

உருத்திர பசுபதி நாயனர்

—:o:—

பூவுலகிற் சிறந்த, பொன்னி மாநதிபாயும் சோழவள நாட்டில் குலத்தின் ஓங்கிய குறைவிலா நிறைகுடி குழுமித் தலத்தில் மேம்படு நலத்ததாகி விளங்கியது பெருந்திருத்தலையூர்.

தேன் சொரியும் நறுமலர்கள் மிக்க சோலைகளையுடையதும், எக்காலமும் மறையவர் வேள்விக்காகத் தீ வளர்த்துக் கொண்டிருப்பதும், ஆனைந்தைச் சிவபெருமானுக்கு அளித்து மகிழ்வதும், அறமும், நீதியும், ஒழுக்கமும் குன்ருத அவ்வூரில், அருமறை, ஓதுகின்ற வாய்மையுடைய சிறந்த வேதியர் குலத்தினில் தோன்றிய தூயவரும், மால்விடையேறும் அண்ணலையும், மலையான் மகளையும் மறவாது அடிமைத்திறம் புரிகின்றவரும் ஆகிய பசுபதியார் என்பவர் வாழ்ந்து வந்தார்.

அவர் பரமசிவனுடைய திருவடிகளை, தூய அன்போடு, அரிய மறையின் சுருதியாகிய, உருத்திரங் கொண்டு வழுத்துதலே தலைசிறந்த செல்வமெனக் கொண்டவர். கரையில் புட்களின் ஒலி கறங்கிடவும் கரிய வரால்மீன்களும் நெடிய கயல் மீன்களும், நீரிலே தோன்றிய நெருப் பொக்கச் சிவந்த தாமரை மலர்களும் நிரம்பிய குளிர்ந்த நீருடைய பொய்கையில் கழுத்தளவு நீரினுள் நின்று, கைகளை உச்சிமேற் குவித்து, கங்கா நாயகனின்பால் பேரன்போடு உருத்திரத்தைப் பயின்று வந்தார்.

அருமறையின் பயனுகிய உருத்திரத்தை இரவும் பகலும் தவருது ஒருமை மனத்துடன் பயிலுதலைக் கண்டு உவந்த உமாமகேசுவரன், தம்பால் காதல் மிக்க பசுபதியாரின் அருந்தவப் பெருமையையும், மறையின் வழுவாத ஒழுக்கத்தையும் கண்டு திருவருள் செய்ய, பசுபதியார் சிவப்பேறெய்தினர். மிக்க அன்போடு உருத்திரத்தை ஓதி, பரம்பொருளின் திருவடிப் பேறடைந்தமையால் உலகோர் அவரை "உருத்திர பசுபதியார்" எனப் போற்றி மகிழ்ந்தனர்.

— தமிழ்விளம்பி

பிரமாதீச ஆண்டு புரட்டாசித் திங்கள் 27–ஆம் நாள் (13-10-73) சனிக்கிழமையன்று, உருத்திர பசுபதியார் திருநட்சத்திரமாகிய அசுபதி வருகிறது